விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 16 ஞாயிற்றுக்கிழமை (01.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

- எதேச்சதிகாரம்
- பாதுகாப்பு இல்லை
- தேவையற்ற புலனாய்வு
- இராணுவ மிரட்டல்
- எனக்கும் அவமரியாதை
- சர்வதேச விசாரணைக் கான கோரிக்கைகள் தொடரும்

# மோசமான நிலையில் இலங்கையின் போக்கு

## நேரில் பார்வையிட்ட பின் நவநீதம்பிள்ளை அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஆட்கள் கண்காணிக் கப்படுவதென்பதும் துன்புறுத்தப் படுவதென்பதும் அதிகரித்து வருவதாகவே தெரிகிறது. இங்கே அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் அடிக்கடி தாக்குதலுக்கு ஆளாகின்றனர். அவர்களது குரல்களை ஒரேயடியாக ஒடுக்கி விடும்காரியங்களும் நடக்கின்றன என ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# நவநீதம்பிள்ளையின் அறிக்கை முன்னரே தீர்மானிக்கப்பட்டது

## ஜனாதிபதி மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

இலங்கைக்கான தனது உண்மை கண்டறியும் பயணம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நவநீதம்பிள்ளை சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை முன்னரே தீர்மானிக்கப் பட்டது என மக்கள் பலரும் கருதுவதாக (23ஆம் பக்கம் பார்க்க)

# அஞ்சலி செலுத்த முயற்சித்த நவநீதம்பிள்ளைக்கு தடங்கல்

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இறுதிக்கட்ட போர் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த மேற்கொண்ட முயற்சியானது அரசாங்கத்தின் கடும் எதிர்ப்பு காரணமாக கை விடப்பட்டதாக தெரியவருகிறது.

அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இறுதிக் கட்டப் போர் நடைபெற்ற பிரதேசத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் தலைவர்கள் உட்பட இறந்தவர்களுக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த ஆணையாளர் தீர்மானித்திருந்ததாக கூறப்படுகிறது.

மனித உரிமை ஆணையாளரின் விஜயம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள ஐ.நா. அமைப்பின் அலுவலகம் என்பன இணைந்து தயார் செய்திருந்த நிகழ்ச்சி நிரலில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவது பற்றி குறிப்பிடப்பட்டிருக்க வில்லை.

எனினும் அவர் முள்ளிவாய்க்காலில் மலர்வளையம் வைத்து போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்த (23ஆம் பக்கம் பார்க்க)

# இளம் பெண் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பூநாறி மரத்தடி பிரதேசத்தில் இளம்பெண் ணொருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

(24ஆம் பக்கம் பார்க்க)

# நீதியான தேர்தலை உறுதிப்படுத்த முடியாது

## கைவிரிக்கிறது கபே

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியான முறையில் நடைபெறும் என்பதனை எம்மால் உறுதிப்படுத்த முடியாது என சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.


யாழ்.நகரிலுள்ள தனியார் ஹோட்டல் ஒன்றில் நேற்று பி.ப. 1.30 மணியளவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் அநீதியான முறையில் நடைபெற்றால் கூட எம்மால் நடவடிக்கை எடுக்க (02ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

# வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸ் தரப்பு தவறிவிட்டது

## பலதரப்பட்டவர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத்தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த பொலிசார் தவறிவிட்டனர் என பலதரப்பட்டவர்களினாலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதோடு பொறுப்பற்ற விதத்திலும் பக்கச்சார்பாகவும் நடந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் தம்பிராசா யாழ்.நகரப் பகுதியில் வைத்து தாக்குதலுக்குள்ளாக்கப்பட்ட போதும் அவரது வாகனத்தின் கண்ணாடி உடைக்கப்பட்ட போதும் குறித்த தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்து சட்டத்தின் முன் பொலிசார் நிறுத்தியிருந்தால்,

சாவகச் சேரிப் பகுதியில் கடந்த 27ஆம் திகதி இரவு துப்பாக்கி பிரயோகச் சம்பவம் இடம்பெற்றிருக்காது என கபே அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது தெரிவித்திருந்தார்.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில்தான் தேர்தல் வன்முறைகள் அதிகளவில் இடம் பெற்றுள்ளது எனவும் இது வரை 43 முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை சாவகச்சேரியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் (23ஆம் பக்கம் பார்க்க)

# தனியார் பஸ் சாரதி பெண்ணுடன் சேட்டை

(யாழ்ப்பாணம்)

வீதயில் சென்ற பெண்ணொருவரினை தனியார் போக்குவரத்து பஸ் சாரதியொருவர் அவதூறாக பேசியமையினால் யாழ் நகரில் நேற்றைய தினம் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுப் பி.ப 1.30 மணியளவில் மணிக்கூட்டு கோபுர வீதியில் நடைபெற்றுள்ளது.

பெண்ணுடன் தகாத வார்த்தை பேசி அவதூறாக நடந்த சாரதிக்கு எதிராக தனியார் போக்குவரத்துச் சங்கத்தினால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அதனை சாரதி பின்பற்றாமையினால் யாழ். அரச அதிபரிடமும், யாழ். பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் - கொடிகாமம் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதியொருவரே இவ்வாறான அவதூறான முறையில் குறித்த பெண்ணிடம் நடந்து கொண்டுள்ளார்.

அவதூறாக நடந்து கொண்ட சாரதியினை அங்கு நின்ற பொதுமக்கள் எச்சரிக்கை செய்த போது, நான் யார் என்று தெரியுமா? நாம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுவோம் எனக் கூறிய இச்சாரதி குறித்த பெண்ணிற்கும், அங்கு நின்றவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். மாவட்ட தனியார் பேருந்து சங்கத்தினருக்கு முறையிட்டதனையடுத்து தலைவர் கெங்காதரன் சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமைகளினை அவதானித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் ஊடகங்களுக்கு உறுதியளித்துள்ளார்.

எனினும் அவருடைய கருத்திற்கு மதிப்பளிக்காத சாரதி நான் செய்வதனை செய்வேன். நீங்கள் என்னென்றாலும் செய்துபாருங்கள் எனத் தலைவரின் நடவடிக்கைகளையும் மதியாமல் தனது வழமையான போக்குவரத்து சேவையில் ஈடுபட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சாரதிக்கு ஒரு மாத வழித்தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் குறித்த சாரதி இவ்வாறான நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகிறார் என அங்கு நின்றவர்கள் தெரிவித்ததோடு இவ்வாறு தரிப்பிட தடையுள்ள வீதிகளில் தனியார் பஸ்ஸினை நிறுத்தி மேற்படி சேட்டையில் ஈடுபடுகின்றார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (செ -4)


## சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்

உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், A/L முடித்தவர்களுக்கும், மிக இலகுமுறையில், குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள...

COMPUTER SALES, SERVICE & REPAIR

சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

NORTH LEAD No : 328, Staly Road, Jaffna (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)

Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

## மிக்குறைந்த விமானக் கட்டணங்கள்

மாதாந்த கொடுப்பனவு முறை

| | |
|---|---|
| கொழும்பு - சென்னை | 1700/=Rtn |
| கொழும்பு - திருச்சி | 1870/=Rtn |
| கொழும்பு - சிங்கப்பூர் | 3050/=Rtn |
| கொழும்பு - மலேசியா | 3350/=Rtn |
| கொழும்பு - மதுரை - | 1640/=Rtn |
| கொழும்பு - லண்டன் | 4550/=Rtn |
| கொழும்பு - பிரான்ஸ் | 9380/=Rtn |
| கொழும்பு - டோகா | 2850/=own |
| கொழும்பு - சுவிஸ் | 8900/=Rtn |



HNB Special Offer for Credit Card holders!

NATION POPULAR TRAVELS & TOURS

www.nationtravels.com

#128, Brown Road, Jaffna 0214920920

(3635) G.C.E (O/L) - 2013

ENGLISH LANGUAGE

துரித மீட்டல் வகுப்பு

ஆரம்பம் : 01.09.2013

10 வருட Past Papers

GENIUS INSTITUTE

பிரபல கொழும்பு விரிவுரையாளர்

184, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் வீதி - பிறவுண் வீதி சந்திக்கு அருகாமையில்)

தொடர்பு : 071 3106279

49 வருட காலமாக

வடக்கின் முத்த அச்சு ஊடக வழங்குநர்

கந்தசாமி அண்ணன்

பல்வேறு இடர்களையும் தாண்டி

இன்று

நவீன உலகின் அச்சு ஊடக வளர்ச்சிப் படி

ARK PRINTING SOLUTIONS

எனும் நிறுவனத்தைப் புதுப்பொலிவுடன்

(இல. 16½, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)

புதிய முகவரியில் ஆரம்பிப்பதை இட்டு பெருமகிழ்வு கொள்ளும் நாம் என்றும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்...

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு."

HARIKANAN

Printers of the North



## Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன்-Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து- Dutch (டச்) புதிய வகுப்புகள் இன்று ஆரம்பமாகின்றன

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

Vivekananda Academy

221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம். (Gov. Reg.No: W/A 76795)

Tel: 0213216928, 0774842464 ,0212220393

(C-4551)

## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்

CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-4511)

## ரிக்கட் இலவசம், இருப்பிடம் இலவசம் மாதம் 65,000/= சம்பாதிக்கலாம்

வெறும் 3 இலட்சம் மட்டும் செலுத்தி

மலேசியாவில் படிக்க உழைக்க அரியவாய்ப்பு

(எல்லா நாட்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(C-4539)

## ஆங்கிலப் பரீட்சை IELTS தேவையில்லை பகுதிநேரமாக இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்

ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க உழைக்க O/L மட்டும் இருந்தால் 21 வயது - ஏனையோருக்கு A/L சித்தி முக்கியம்

(எல்லா நாட்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(C-4539)


# நீதியான தேர்...

முடியாது எனவும் கபே இயக்கம் தெரி வித்துள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் அநீதியான முறையில் நடைபெற்றால் கபே இயக்கம் அடுத்து என்ன நடவடிக்கையினை எடுக்கும் எனறு கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிககையில், வட பகுதியில் தேர்தல் வன்முறைகள் உச்சமடைந்து வருவதற்கு நீதியும் சட்டமும் சரியான முறையில் அமுலபடுத்தப்படாமையும், அவை தாமதமாகவே அமுல்படுத்துவதுமே காரணமாகும். சட்டமும் நீதியும் சரியான முறையில் அமுல்படுத்துவதன் மூலம் தான் நீதியான தேர்தல் ஒன்று நடை பெறுவதற்கு அறிகுறியாகும்.

மக்கள் அச்சுறுத்தல்கள் எவையுமின்றி பயமமில்லாத நிலையில் சுதந்திரமான முறையில் வாக் களிப்பதற்கான ஏற்பாடுகளினை நீதியும் சட்டமும் மேற்கொள்ள வேண்டும்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் பிரசாரத்திற்காக 90 வீதம அரச சொத்துக்களினை துஷ்பிரயோகம் செய்துள்ளமையினையும் கண்டறியப் பட்டுள்ளது.

வடக்குத் தேர்தல் சாதாரணமான முறையில் நீதியான தேர்தலாக நடைபெற வேண்டும் என்பது தான் எமது அமைப்பின் எதிர்பார்ப்பாகும்.

அவ்வாறு சுதந்திர தேர்தல் நடைபெற வேண்டுமாயின் தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு வாக்களிக்கும் நிலை ஏற்படுத்தப்படல் வேண்டும் என்றார் கீர்த்தி தென்னக்கோன். (செ-4,6)


edexcel

G.C.E (A/L) இன் பின்னர்...

Are you Ready?

Access Programme

ISO 9001:2008 CERTIFIED

www.bcas.lk

BSc (Hons) / BA (Hons) / BEng (Hons) / LLB (Hons)

BTEC HND Full Time / Part Time

Foundation Course

O/L After A/L

இலங்கையில் சர்வதேச உயர்கல்வி கற்கை நெறிகளை வழங்கும் மிகச்சிறந்த உயர்கல்வி நிறுவனம் எனும் Edexcel, UK நிறுவனத்தின் சான்றிதழுடன் வெற்றி நடைபோடும் BCAS Campus வழங்கும் Access Programme (Degree Foundation) எனும் பாடநெறியினை GCE A/L பரீட்சையினை எழுதி முடித்திருக்கும் மாணவர்களாகிய உங்களுக்கு கணனி, ஆங்கிலம் மற்றும் ஆளுமை விருத்தி போன்றவற்றில் திறமைகளை விருத்தி செய்வதற்கான முறையான பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதோடு 6 சர்வதேச வரவேற்பை பெற்ற சான்றிதழ்களையும் இப்பயிற்சி நெறி முடிவில் பெற்றுக் கொள்வதற்கான அரிய வாய்ப்பும் கிடைக்கின்றது.

அத்தோடு குறுகிய காலத்திற்குள் UK, USA, Australia, Canada போன்ற நாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களினூடாக (Hons) Degree பட்டப்படிப்புகளையும் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை இதன் மூலம் இலகுவாக கிடைக்கிறது.

IELTS

Dip. in English

கொழும்பிலிருந்து வருகை தரும் ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் ஐரோப்பிய ஆசிரியர்களின் நேரடி வழிகாட்டலில் முழுமையான ஆங்கிலச் சூழலில் பாடநெறிகள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படுகின்றன | FREE Study Pack

உயர்கல்வி மற்றும் உயர்தரத்திற்கு பின்னரான கற்கை நெறி தொடர்பான இலவச ஆலோசனைகளுக்கு BCAS Jaffna Campus இனை நாடுங்கள்.

5 Certificates by BCAS | 2 Certificates from Edexcel, UK

BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.

T : 021 2219910 | E : info@bcas.lk

தொடர்புகளுக்கு 0777 102131

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

வடமாகாண சபைத் தேர்தல் 2013

கிளிநொச்சி மாவட்டம்



60 வருட கால
சுயநலமற்ற அரசியல்
அனுபவத்தை
மீண்டும் பெற்றிட....

வீ.ஆனந்தசங்கரி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)

(CE4931)

X 2

# தனது மக்களை பிரபாகரனே கொலை செய்தார்—மஹிந்த

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாக ரன் சொந்த மக்களைக் கொலை செய்து, அதில் சந்தோசமடைந்தார் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொலை செய்வதில் திருப்தி கொள் ளும் உளநிலையே பிரபாகரனுக்கு காணப்பட்டது என ஜனாதிபதி அவுஸ்திரேலிய ஊடக மொன்றுக்கு செவ் வியளித்துள்ளார்.

அச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

மாற்றுக் கொள்கைகளை வெளி யிடும் தமிழ் தரப்பினரையும் சொந்த மக்களையும் சொந்த உறவுகளை யும் வேண்டுமென்று திட்டமிட்டு கொலை செய்துள்ளார்.

பொது மக்களை நாம் கொலை செய்திருந்தோமாயின் 3இலட்சம் பொதுமக்கள் அரசாங்கக் கட்டுப் பாட்டு பிரதேசத்திற்குள் வந்திருக்க மாட்டார்கள். எமது நாடு பற்றி குற்றம் சுமத்துவோர் அங்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிடுமாறு கோருகிறேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பு தொடர்ந்தும் இயங்கி வருகிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் அவுஸ்திரேலிய சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைளுடன் தொடர்புபட்டுள்ளனர் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013

யாழ்.மாவட்டம்



எமது நிலம் எமக்கு வேண்டும்!
எமது கடல் எமக்கு வேண்டும்!!

எம்.கே.சிவாஜிலிங்கம் 9

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்


இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி X

1 2 3 4 5 6 7 8 9 10
11 12 13 14 15 16 17 18 19

(E-011)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத் தேர்தல் 2013

X 4




(CE4933)

எங்கள் அண்ணன்
சிராஸ்
சேவைகள் என் கரங்களில்
தீர்மானிப்பது உங்கள் மனங்களில்

www.voiceofseeras.com

மாகாணசபைத் தேர்தல் - 2013
யாழ் மாவட்டம்



15
தர்மலிங்கம் சித்தார்த்தன்
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

X



17
பாலச்சந்திரன் கஜதீபன்
(ஆசிரியர், தலைவர் - இளைஞர் அணி)

1 2 3 4 5 6 7 8 9 10
11 12 13 14 15 16 17 18 19

(CE4934)

தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

# நவி அம்மையார் தான் கண்ட உண்மைகளை விரைவில் அறிக்கையாக வெளியிடுவார்-மனோ

(கொழும்பு)

**ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவ நீதம்பிள்ளை புலிகளின் பயங்கரவாதத்தைக் கண்டித்துள்ளார். அது மட்டுமல்ல புலம் பெயர்ந்த தமிழர்கள் புலிகளைத் தொடர்ந்தும் போற்றி வாழ முனையக் கூடாது எனவும் அவர் இலங்கை மண்ணில் நின்று கூறியுள்ளார் என ஐ.ம.முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.**



இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா.மனித உரிமை ஆணையாளரின் இந்தக் கருத்துக்களைக் கேட்டு இலங்கை அரசும், அரசை சுற்றியிருக்கும் பேரினவாத அமைப்புக்களும் சந்தோசப் படுகின்றன. ஆனால் இந்த மகிழ்ச்சி ஒற்றைக் கண் மகிழ்ச்சியாகத்தான் இருக்க முடியும்.

சர்வதேச அங்கீகாரம் இல்லாத ஒரு கெரில்லா இயக்கமான புலிகளை விட உலக ஏற்புடைய ஐ.நாவில் உறுப்புரிமை கொண்ட ஒரு நாடான இலங்கை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள அரசபயங்கரவாத குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் விசாரிக்க முனையும் போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பாக அரசாங்கத்தின் பொறுப்புக் கூறலை வலியுறுத்தும் போதும் இலங்கை அரசு மண்ணெண்ணெயில் விழுந்த சாரைப்பாம்பு போல் கலவரப்படக்கூடாது.

ஐ.நா. மனித உரிமைஆணையாளர் இங்கே வந்து புதிய விபரங்கள் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை. இலங்கையில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட மற்றும் நிகழ்த்தப்பட்டு வரும் மனித உரிமைக் கொடுமைகளை அத்தாட்சிப் பூர்வமாக ஐ.நா மனித உரிமைஆணையம்அறியும் ஆணையாளரின் நேரடி விஜயம் என்பது ஐ.நா சபையின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டது.

புலிகளைப் பற்றிய கடும் விமர்சனம் ஏற்கனவே ஐ.நா செயலாளர் நாயகத்தின் குழு சமர்ப்பித்த அறிக்கையின் விலாவாரியாக இருக்கின்றது. எனவே புலிகள் பற்றிய விமர்சனம் புதியதல்ல.

இலங்கை அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் குறிப்பாக உரிமை மீறல் விசாரணை மற்றும் பொறுப்பு கூறல் ஆகியவை தொடர்பில் என்னதான் செய்துள்ளது என்பதை நேரடியாக பார்த்துச் சொல்லவதற்கே அவர் இங்கு வந்தார். தவிர அமைச்சர் மேர்வின் சில்வா என்ற கோமாளியுடன் திருமண பந்தம் பற்றி ஆராய அவர் வரவில்லை. இங்குவாழும் எமக்கோ இலங்கை அரசு நடைமுறைப்படுத்தியுள்ள சொந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகள் எதனையும் குறிப்பாக பிரதான விடயங்கள் தொடர்பில் காணக் கிடைக்கவில்லை.

நவநீதம்பிள்ளை தனது ஆய்வில் எதனை கண்டார் என்பது விரைவில் தெரிந்துவிடும். எது எப்படிஇருந்தாலும்நமதுமக்களுக்குஉரிமை மீறல்கள் தொடர்பிலும் அரசியல் அதிகார பகிர்வு தொடர்பிலும் உரிய ஏற்பாடுகள் நடைமுறை ஆகும் வரை நாம் எமது அரசியல் மற்றும் இராஜதந்திர போராட்டங்களைத் கைவிட முடியாது.

இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டம் தொடர்பாக சர்வதேச சமூகத்தை நாடும் எமது உரிமையை எந்த சந்தர்ப்பத்திலும் நாம் கைவிடுவதற்கு உடன்படமாட்டோம் என்பதையும் இலங்கை அரசாங்கம் தெளிவாக மனதில் கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

## 250 கோடி பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

கொள்கலனில் மறைத்து வைத்து இலங்கைக்கு கடத்திவரப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி 250 கோடி ரூபாவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாக சுங்கப் பிரிவு பணிப்பாளர் மாலி பியசேன தெரிவித்துள்ளார்.கிறிஸ் பொதியிடப்பட்டு ஆயிரத்து 200 பேணிகளில் வைக்கப்பட்டே இந்த ஹெரோயின் நேற்றுமுன்தினம் கடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் பாகிஸ்தான் பிரஜைகள் உட்பட நால்வர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-2)

# வாரம் ஒரு தகவல்

## உண்மையான மரியாதை எது?

ஒருநாள் ஓர் இளைஞர் ஒருவர் ஞானி ஒருவரைத் தேடி அவரது ஆச்சிரமத்துக்கு வந்தார்.

அவ் இளைஞர் ஞானியைக் கண்டதும் "ஐயா... நான் வெகு தூரத்திலிருந்து வந்திருக்கிறேன்" என்றார்.

ஞானி இளைஞனை நோக்கி "உனக்கு என்ன வேண்டும்" என கேட்டார். அதற்கு அவ் இளைஞன் எனக்கு ஓர் உண்மை தெரிய வேண்டும் என்றார்.

இதைக் கேட்டதும் ஞானி "என்ன உண்மை " என வினாவ "நான் உங்களுக்குச் சீடனாக விரும்புகிறேன் அதற்கான தகுதி எனக்கு இருக்கிறதா இல்லையா என்பது தெரிய வேண்டும் " என பதிலளித்தான்.

எனவே ஞானியும் அவ் இளைஞரை தமது ஆச்சிரமத்தினுள் அழைத்து "இப்போது உன்னால் எனக்கு ஒரு காரியம் ஆக வேண்டியிருக்கிறது " என்றார்.

அதற்கு அவ் இளைஞன் "சொல்லுங்கள்... செய்யக் காத்திருக்கிறேன்... நான் என்ன செய்ய வேண்டும்?" என கேட்டார்.

அப்போது ஞானி "கொஞ்ச நேரம் என் உடம்பில் ஏறி மிதிக்க வேண்டும் " என்றார்.

அதற்கு இளைஞனோ "ஐயா அது மட்டும் என்னால் முடியாது. நீங்கள் ஒரு பெரிய ஞானி... உங்கள் கால் தூசுக்கும் ஈடாக மாட்டேன்...

உங்கள் மீது என் கால்படுவதா?" என்றார்.

எனினும் முனிவர் "மகனே இப்போது எனக்கு உடல்வலி..." என்று விளக்கினார் என்ற போதும் அவ் இளைஞன் "அதற்காக என் உயிரைக் கூட வேண்டுமானால் தரத்தயாராக இருக்கிறேன்... ஆனால் உங்களின் புனிதமான உடம்பை மட்டும் நான் மிதிக்க மாட்டேன்!" என மீண்டுமாய் மறுத்தார்.

அதற்கு ஞானி "என்னுடைய உடம்பை மிதிக்க நீ மறுக்கிறாய்... ஆனால் என்னுடைய உதடுகளை உன் காலடியில் போட்டு மிதிக்கிறாய். குருவின் வார்த்தைகளை மிதிக்கிறவன் எப்படி அவரை மதிக்கிறவனாக முடியும்?" என்ற பின் ஞானி தொடர்ந்து அவ் இளைஞனுக்கு உபதேசம் செய்தார். அதில் அவர் "மரியாதைக் குறைவாகத் தோற்றுகிற செயல்கள் எல்லாம்... மரியாதைக் குறைவான செயல்கள் அல்ல" என விளக்கிக் கூறினார்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

01.09.2013
(ஆவணி 16, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 12.25 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 1.57 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
மூன்றாவது ஆவணி ஞாயிறு.
ஏகாதசி விரதம்

**மேடம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தாய்வழி உறவில் நன்மையுண்டு, கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**இடபம்** உடன் பிறப்புக்கள் மூலம் உற்சாகமான தகவலொன்று வந்து சேரலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும் நாள்.

**மிதுனம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், சுப செய்திகள் வந்து சேரலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விஷ்ணுவை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**சிங்கம்** மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், உறவினரைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** யோகமான நாள், இளைய சகோதர வழியில் இனிய தகவலொன்று வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறலாம்.

**துலாம்** செய் தொழில் மேன்மை பெற பெரிதும் பாடுபடுவீர்கள், புதிய திட்டங்கள் கை கூடும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு, உற்சாகமான நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள், சுற்றத்தாரின் வருகையுண்டு, தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும்.

**தனுசு** கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை எடுக்க வேண்டிய நாள், பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கூறலாம்.

**மகரம்** எடுத்த காரியங்கள் எளிதில் கை கூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், கௌரவமான நாள்.

**கும்பம்** உடல் நலம் சீராகும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும், பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி நல்ல முடிவெடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொலைபேசி மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்---தி

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 |
| உருளைக்கிழங்கு | 100-140 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 100 |
| தக்காளி | 30 | 40 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 80 | 120 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 140-160 | 160-200 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 140 |
| பாகற்காய் | 80 | 60 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 |
| பயற்றங்காய் | 30 | 60 | 60 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 80 | 160 | 120 |
| போஞ்சி | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 25 | 30 | 20 |
| தேசிக்காய் | 250 | 350-400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 70 | 120 | 120 |


வணக்கம்!
நாம் இத் தேச மக்களின் வாழ்வோடு இணைந்து, அசைக்க முடியாத
நிலையான நம்பகத் தன்மையையும் உருவாக்கியுள்ளதுடன், மக்களின் வாழ்க்கைப்
பாதைக்கான பல்வேறு வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். நாம் எமது
தனித்துவத்தை அடையாளப்படுத்தி முன்னோக்கிச் செல்கின்றோம். அவ்வாறே
இன்று நாம், சரித்திரப்புகழ் வாய்ந்த, இயற்கைத் துறைமுக நகரமான திருகோணமலையில்
அடியெடுத்து வைப்பதையிட்டு பெருமகிழ்வு கொள்கிறோம். உங்கள் வாழ்வினை பலமுடன்
கட்டியெழுப்பிடவும், புதிய அத்திவாரத்திற்காக நாம் இணைகிறோம்.
ஹொல்சீம் நிறுவனமாகிய நாம், உங்களுடன் இணைவதில் பெருமிதம் கொள்கிறோம்.
உங்கள் வாழ்வினை நிலையாக கட்டியெழுப்புவதற்கான புதிய அத்திவாரம்!
Holcim
Holcim

# சமுர்த்தி வங்கிகளின் அறிவூட்டல் கருத்தரங்கு

(காரைநகர்)

வடமாகாண சமுர்த்தி வங்கிகளின் உறுப்பினர்களுக்கான அறிவூட்டல் கருத்தரங்குகள் இன்று முதலாம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரை ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நடைபெறவுள்ளது.

சமுர்த்தியின் ஒவ்வொரு வலயத்தின் கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள சமுர்த்தி சங்கங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களை அழைத்து கிராமத்தின் பொது இடத்தில் இக் கருத்தரங்கு இடம் பெறவுள்ளது.

இதில் சமுர்த்தி வாழ்வாதார நடவடிக்கைகள், கடன் விண்ணப்பதாரிகளை தெரிவு செய்தல், சமுர்த்தி சிறு குழு நடவடிக்கைகள், சமூக அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

இக்கருத்தரங்கிற்கு மேலதிகமாக சமுர்த்தி வங்கி வலயமட்டத்தில் எதிர்வரும் 7 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதிக்குள் சமுர்த்தி சமூக அபிவிருத்தி கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் சமுர்த்தி பிரிவினரால் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக சமுர்த்தி வங்கி பணிப்பாளர் நாயகம் பி.பி. திலகசிறி தெரிவித்துள்ளார். (அ-9-246)



நன்றி: அததெரண

# சாவகச்சேரி பொதுநூலகத்தில் மின்குமிழ்கள் ஒளிரவில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் கீழுள்ள பொது நூலகத்தின் மின்குமிழ்கள், மின்விசிறிகள் சில இயங்காமையால் வாசகர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேற்படி நூலகத்திலுள்ள மின்குமிழ்கள், சில இயங்காதுள்ளதனால் நூலகத்தை பயன்படுத்துகின்றவர்கள் நூல்களை வாசிக்க முடியாது சிரமப்படுகின்றனர்.

இது தொடர்பில் நூலக உத்தியோகத்தரிடம் வினவிய போது கடந்த வருடம் முதலே மின்குமிழ்களும் மின்விசிறிகளும் இயங்கவில்லை என நிர்வாகத்தினரிடம் தான் அறிவித்ததாவும் இதுவரை இது தொடர்பில் மாற்று வழிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் கூறினார்.

எனவே, நூலகத்தை சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை பயன்படுத்தி வருவதனாலும், வாசகர்களின் நிலையைக் கருத்தில் கொண்டும் மின் குமிழ்களையும், மின் விசிறிகளையும் உரியவர்கள் மாற்றியமைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-29)





# மோ.சை.விபத்தில் ஒருவர் காயம்!

(கரணவாய்)

சிறுப்பிட்டியிலிருந்து தொண்டைமானாறு நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, சிறுப்பிட்டியிலிருந்து தொண்டைமானாறுக்கு சென்று கொண்டிருந்த மோட்டார்சைக்கிள் வல்லை வெளியில் கட்டுப்பாட்டை இழந்ததினால் அதில் பயணித்த சோமசுந்தரம் சசிதரன் (வயது 35) என்பவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்தார்.

இவர் தற்பொழுது மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ-9-60)

# வீதியை புனரமைக்க கோரிக்கை

(தும்பளை)

குடத்தனையிலிருந்து மணற்காட்டுக்குச் செல்லும் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை பிரதேச சபைக்குட்பட்ட சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தையுடைய இவ்வீதி போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதளவிற்கு காணப்படுகின்றது.

எனவே, மழை காலத்திற்கு முன்னர் வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-19)

# 6 ஆம் திகதி வரை இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். போதனாவைத்தியசாலை இரத்த வங்கியால் நடத்தப்படும் இரத்த தான முகாம் கடந்த 29ஆம் திகதி முதல் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நல்லூர் அரசடிச்சந்திக்கு அருகாமையிலுள்ள சமூக அபிவிருத்தி மன்றக் கட்டடத்தில் நடைபெற்று வருகிறது.

எனவே, இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக் கொடையாளர்கள் மேற்படி இரத்ததான முகாமில் கலந்து கொண்டு பங்களிப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (அ-5)

# சுகாதாரமற்ற முறையில் பழங்களை விற்பனை செய்தவருக்கு அபராதம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தைக்கு எதிர்ப்புறமாக நகர சபையின் சட்ட விதிகளை மீறி சுகாதாரமற்ற நிலையில் பழங்களை விற்பனை செய்த வியாபாரி ஒருவருக்கு எதிராக நகரசபையினரால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பழ வியாபாரியை நகர சபை வருமான வரி உத்தியோகத்தர்கள் பொதுசந்தைக்குள் வைத்து சுகாதாரமான முறையில் பழங்களை விற்பனை செய்யுமாறு அறிவுறுத்தியிருந்தனர்.

ஆயினும் பழ வியாபாரி, அவர்களின் கட்டளைக்கு அமையாது தொடர்ந்தும் குறித்த இடத்தில் வைத்து விற்பனையை மேற்கொண்டதையடுத்து நகரசபை தலைவரின் அறிவுறுத்தலுக்கு அமைய பழ வியாபாரி நகர சபையில் ஒப்படைக்கப்பட்டார்.

வியாபாரி தனது தவறை ஒப்புக் கொண்டு நகர சபைத்தலைவரிடம் மன்னிப்புக் கேட்டதற்கு இணங்க அவரது குடும்பச் சூழலை கருத்தில் கொண்டு அவருக்கு சிறு தொகை அபராதம் விதிக்கப்பட்டது. சந்தையின் உட்புறத்தில் சுகாதாரமான முறையில் வியாபாரம் மேற்கொள்ளும்படி அவருக்கு மீண்டும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-9-29)





வடமாகாண மின்சார சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை மின்சாரசபை வடமாகாணத்தைச் சேர்ந்த 90 உத்தியோகத்தர்களுக்கு ஒருநாள், அவசர முதலுதவிப் பயிற்சி வழங்கும் நிகழ்வு யாழ். பொது நூலகக் கேட்போர் கூட்டத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பயிற்சி வழங்கப்படுவதையும் கலந்து கொண்ட உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.

# நூல்கள் அன்பளிப்பு

(தும்பளை)

நாகர் கோயில் மக்கள் ஒன்றியத்தினரால் நடத்தப்படும் கல்வி நிலையத்துக்கு பளை மாதார் அ.த.க. பாடசாலையின் வரலாற்று ஆசிரியர் மு.கண்ணகுமார் மாணவர்களுக்கான 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வரலாற்று புத்தகங்களை அன்பளிப்புச் செய்துள்ளார். (அ-9-19)

# மாங்குளம் வித்திக்கு 15 ஆயிரம் ரூபா உதவி

(யாழ்ப்பாணம்)

முல்லை. மாங்குளம் மகாவித்தியால்ய முகப்புத் தோற்றத்தில் சைவ சின்னமான நந்திசிலை அமைப்பதற்கான நிதியுதவியாக பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணா சேவாச்சிரமத்தால் 15 ஆயிரம்ரூபா பாடசாலைக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சுவாமி விவேகானந்தரின் 150ஆவது பிறந்த தினத்தையொட்டி இடம்பெற்ற நிகழ்விலேயே மேற்படி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. (அ-5)

# தேர்தல் தொகுதிகளில் கண்காணிப்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

தேர்தல் வன்முறைகளை கண் காணிப்பதற்கான நிலையம் வடக்கு மாகாண சபை தேர்தல் தொகுதிகள் அனைத்திலும் தேர்தல் கண்காணிப் பாளர்களை நியமிக்கவுள்ளது.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் நடைபெற்ற ஊடகவியாளர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர்கள் மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளனர்.

இதைவிட வடக்குமாகாணசபைத் தேர்தல் நடைபெறும் செப்டெம்பர் 21 ஆம் திகதியன்று அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் இத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடு படுத்தப்படவுள்ளனர். நீதியான தேர்தலை உறுதிப்ப டுத்தும் முகமாகவே இத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத் தப் படவுள்ளனர் என்றார் அவர் (அ-4-6)

# வெலிவேரிய சம்பவம்; இராணுவ உயரதிகாரிகள் பதவி நீக்கம்

(கொழும்பு)

வெலிவேரிய பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் இராணுவத்தில் உயர் பதவி நிலை வகிக்கும் நான்கு அதிகாரிகள் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்னாயக்காவின் உத்தரவுக்கிணங்க உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் குறித்த பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய அந்தப் பிரதேசத்திற்கு பொற்றுப்பாக பதவி வகித்த பிரிகேடியர் ஒருவரும் பிராந்தியத்திற்கு பொறுப்பாக பதவி வகித்த லெப்டினன்ட் கேர்ணல் மூவருமே இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிக சூரிய தெரித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்றுமுன் தினம் பிற்பகல் கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்ட இராணுவ பேச்சாளர் கருத்து தெரிவிக்கையில்,

மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்ட இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த இராணுவத் தளபதி அதனை இராணுவ சட்டப் பணிப்பாளருக்கு சமர்ப்பித்துள்ளார்.

இதற்கமைய இராணுவ நீதிமன்றத்தின் வழக்கு தொடுநரான இராணுவ சட்டப் பணிப்பாளர், இந்த அறிக்கை தொடர்பில் முழுமையாக ஆராய்ந்து இராணுவ நீதிமன்றத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா? இல்லையா? என்பது தொடர்பில் சிபாரிசை முன் வைப்பார்.

இராணுவம் சட்ட வரையறைகளை மீறி செயற்பட்டிருந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் இராணுவ சட்டப் பணிப்பாளரினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்ற நிலையிலேயே, அந்த விசாரணை முடியும் வரை நான்கு அதிகாரிகளும் வகிக்கும் பொறுப்புக்களிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் அவர்களது தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுமுள்ளனர்.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமையவே அங்கு இராணுவத்தினர் சென்றுள்ளனர் என்பது தெளிவாக தெரியவந்துள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட விதி முறைகளுக்கு இணங்கவே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.இதேவேளை, இராணுவ விசா ரணை நீதிமன்றத்தினால் சமர்ப்பிக் கப்பட்ட அறிக்கையை விரிவாக ஆராயும் பொருட்டு இராணுவத் தளபதியினால் ஐந்து சிரேஷ்ட இரா ணுவ உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நியமிக் கப்பட்டுள் ளது. (அ-2)

# சமூக மேம்பாட்டுக்காக உழைக்க வேண்டும்

## நவிபிள்ளை அறிவுரை

இலங்கையில் இளைஞர், வேற்றுமைகளை களைந்து சமூக மேம்பாட்டுக்கு உழைக்க வேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கோரியுள்ளார்.அதேநேரம் இலங்கை அரசாங்கம் தற்கொலை, தொழிலின்மை மற்றும் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கை விஜயத்தின் ஒரு கட்டமாக அவர் நேற்று முன்தினம் இளைஞர் நாடாளுமன்றத்தின் மூன்றாவது அமர்வில் உரையாற்றினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,தாம் இலங்கையில் உள்ள இளைஞர்கள் மற்றும் போரினால் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளவர்கள் தொடர்பில் அதிக அக்கறை கொண்டுள்ளதாக குறிப்பிட்டார்.மதங்களைத் தவறாக பயன்படுத்தி இளையோர்களை பிழையான வழியில் இட்டுச் செல்லல், மாற்று சமூகத்தின்ருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் போன்ற விடயங்கள் தவறானவை என்றும் நவநீதம்பிள்ளை சுட்டிக் காட்டினார்.இலங்கையில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் வகையில் கல்வி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இந் நிலையில் இலங்கையை உலகில் சிறந்த நாடாக கட்டியெழுப்ப ஐக்கிய நாடுகள் சபை உதவும் என்றும் அவர் உறுதியளித்தார். (அ-2)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ். மாவட்டம்



கே.என்.விந்தன் கனகரத்தினம்(MMC)
(யாழ்.மாநகர சபை உறுப்பினர்)
நீதியான அரசியல் தீர்வு
நிலையான அமைதி வாழ்வு
நிரந்தர சமாதானம்
என்ற எம் இனத்தின்
எதிர்பார்ப்பினை
உள்நாட்டிலும் உலக
அரங்கிலும் எடுத்துரைப்போம்
12
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 12
(E-016)




வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
4




வீ.கனகசுந்தரசுவாமி
(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
இலங்கைத் தமிழரசுக் கட்சி X
அன்பு நெஞ்சங்களே.....!
வாழ்ந்தாலும் உங்களோடு
வீழ்ந்தாலும் உங்களோடு
வளர்ந்தாலும் உங்களோடுதான்
எந்தமிழ் மணம் மாறாது நின் தமிழோசை பரவும்
அதற்கு எந்தனுக்கு உங்கள் வாக்குகளை
அள்ளி வழங்கி உதவுவீர்களாக.
(E-020)



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்



எமது போராட்டத்தில்
இதுவரை இழந்த இழப்புகளை
அர்த்தமுள்ள உரிமை
அரசியலாக்க வாக்களியுங்கள்
5
ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)



ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித் தலைவர்)
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5
(E-019)



வடமாகாண சபைத் தேர்தல் 2013
முல்லைத்தீவு மாவட்டம்
வல்லிபுரம் கமலேஸ்வரன்
(தலைவர், இலங்கைத் தமிழசுரக் கட்சி
முல்லை மாவட்டம்,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
சிறையில் வாடும்
எம் இளைஞர்களை மீட்டெடுக்க
போரினால் பாதிக்கப்பட்ட முல்லை
மாவட்டத்தை புத்துயிர் பெறச் செய்திட
உங்கள் தெரிவு.....



(E-018)
இலங்கைத் தமிழரசுக் கட்சி X 7

# வாய்ச் சொல்லில் வீரர் கருணாநிதி; வசைபாடுகின்றார் ஜெயலலிதா

இலங்கை தமிழர் பிரச்சினை உட்பட தமிழர்களினதும் தமிழ் நாட்டினதும் பிரச்சினைகளில் தி.மு.க. தலைவர் கருணாநிதி துரோகம் இழைத்து விட்டதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா குற்றம் சுமத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தன்னலத்திற்காக காவிரி நதிநீ ர்ப் பங்கீடு, கச்சதீவு தாரைவார்ப்பு, இலங்கைத் தமிழர் பிரச்சினை, சில்லறை வணிகத்தில் அந்நிய முதலீடு என பல்வேறு பிரச்சினைகளில் தமிழர்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் துரோகம் இழைத்தவர் தி.மு.க. தலைவர். கருணாநிதி தமிழக மக்களின் எதிர்ப்பையும் தாண்டி தமிழ் நாட்டின் உரிமையைப் பறிக்கக்கூடிய தமிழகத்திற்கு நிதிச் சுமையை தரக் கூடிய தேசிய உணவுப் பாதுகாப்பு மசோதவிற்கு ஆதரவாக தி.மு.க. மக் களவை உறுப்பினர்களை வாக்களிக்கச் செய்து துரோகம் இழைத்துள்ளதைப் பார்க்கும் போது எத்தனை புடம் போட்டாலும் இரும்பு பசும் பொன் ஆகுமா? என்ற பழமொழியைத் தான் நினைக்கத் தோன்றுகி றது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை, பொருளாதாரக் கொள்கை, தமிழக மீனவர்கள் பிரச்சினை, கச்சதீவு பிரச்சினை, காவிரிப்பிரச்சினை, முல்லைப்பெரியாறு பிரச்சினை என அனைத்திலும் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராகவேசெயற்படும்மத்தியகாங்கிரஸ்கட்சிக்குவெண்சாமரம் வீசிக் கொண்டிருக்கிறார் கருணாநிதி.

வாய்ச் சொல்லில் வீரரடி என்ற மகாகவி பாரதியாரின் பாடல்வரிகள் தான் நினைவிற்கு வருகின்றன. கருணாநிதியின் இரட்டை வேடத்திற்கும் தமிழர்களுக்கும் தமிழகத்திற்கும் எதிரான நடவடிக்கைகளுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை என்று தெரிவித்துள்ளார். (அ-2)

A/L மாணவர்களின் கவனத்திற்கு
A/L பூர்த்தி செய்த மாணவர்களுக்கு உடனடி வேலை வாய்ப்பு
0710920920
www.nationjobbank.com
(சீ/4549)

கார் விற்பனை
தனிப்பாவனையிலிருந்த
TOYOTA COROLLA
121 CAR
விற்பனைக்குண்டு
(3833)
தொடர்புகளுக்கு - 0777173414

காணி விற்பனை
கோண்டாவிலுக்கும் திருநெல்வேலிக்குமிடையில் பலாலி வீதியில் 50" தூரத்தில் 6 பரப்புக் காணி சிறுதுண்டுகளாகப் பிரித்து கொடுக்கப்படும்
(3832)
தொடர்புகளுக்கு - 0750422158

TAKE IT EASY
2013
One Day Orientation WORKSHOP
For
A\L Students
FREE Pendrive



காலம் 2013.09.02 Monday @ 9:00 am
A\L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
✓ கணனி , ஆங்கில, வியாபார முகாமைத்துவ கற்கைநெறி தொடர்பான உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்
✓ மாணவர்களுக்கு இலவசமான சர்வதேச தரமிக்க சான்றிதழுடனான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான கற்கைநெறிகள் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்
2nd Sept பதிவுகளுக்கு விசேட கட்டணச் சலுகைகள்
பதிவுகளுக்கு : 077 372 8 842
(சீ/4545)
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, jaffna
Tel : 021 222 4142 | 077 309 9 308

ETS TOEIC Know English. Know Success.
English for Everyone
சர்வதேச ஆங்கில தகைமைகள் பெறுவதற்கான சந்தர்ப்பம்
TOEIC Bridge
• அடிப்படை ஆங்கில அறிவை பெறுவதற்கான பாடத்திட்டம்
• வேலைவாய்ப்பு இலகுவில் பெறுவதற்கான கற்கைநெறி
• 03 மாத கால பயிற்சிநெறி
• இலவச கணினி வகுப்புக்கள் அத்துடன் இரண்டு சான்றிதழ்களையும் பெற முடியும். (கணினி + TOEIC சான்றிதழ்)



English for visas (A1/B1/C1)
TOEIC® Speaking and Writing
TOEIC® Listening and Reading
Basic English Spoken English
English for work
Jaffna Uduppiddy Kilinochchi
International Knowledge Pool
இல:116, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
வதிரி வீதி, உடுப்பிட்டி சந்தி, உடுப்பிட்டி (அமெரிக்கமிசன் கல்லூரிக்கு அருகில்)
168, ஏ9 வீதி, ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி
Hot Line: 077 857 5406
(சீ/4547)

Professional and Job oriented courses in Jaffna
Business, IT and Hotel Management courses
Diploma /HND in Business Management
International Diploma in computer studies (IDCS)
CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY
Diploma in Tourism and Hospitality
Diploma in Hotel Management
English courses
Basic English with spoken
English for work
English Teacher Training
IELTS CAMBRIDGE ENGLISH Language Assessment Part of the University of Cambridge
Specialized IT courses
Diploma in Information Technology-University of Colombo
Graphics and multimedia
CIW CompTIA A+
Web Designer IT support technician



LONDON BUSINESS COLLEGE
Hot line 0775301299
36, Palaly Road, Kantharmadam, Jaffna
Vathiri Road, Uduppiddy Junction, Uduppiddy
168, A9 Road, Ananthapuram West, Kilinochchi
100 மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டம்
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
இலங்கையில் உள்ள நிறுவனங்களில் பயிற்சித் திட்டம்/ வேலைவாய்ப்பு.
உயர்கல்வி கற்பதற்குரிய இலகு வங்கிக்கடன் வசதிகள்.
வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள்
(சீ/4546)




புதிய சுவை! புதிய அநுபவம்! புதிய தொழில்நுட்பம்!
அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231 , Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
(3587)


# வடமாகாணசபைத் தேர்தல் - 2013

## யாழ் மாவட்டம்





## தமிழரின் உரிமைகளை படிப்படியாக வென்றெடுக்கக்கூடிய துணிச்சல் மிக்க ஒரே வேட்பாளர்





# அருள். ஜெயந்திரன் (சண்ஜெ)

**(சண்ஜெய்ஸ் நிறுவனங்களின் உரிமையாளரும்**
**பிரபல வர்த்தகர் ச.வே.சண்முகம்பிள்ளையின் பேரனும் (நீர்கொழும்பு),**
**முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் (DPDHS)**
**யாழ் - கிளிநொச்சி, டாக்டர் இ.அருள்பிரகாசத்தின் மகனும்)**

X ~~2~~

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கட்சியாலும் அனைத்து இன, மத மக்களாலும் உருவாக்கப்பட்ட ஓர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA) இரட்டை இலை



**வி. சகாதேவன்**
முதன்மை வேட்பாளர் ~~13~~
**போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கட்சியின் தலைவர்**

### எமது அன்பான உறவுகளே!

காலமறிந்து, தமிழ் மக்களின் தேவையறிந்து இதய சுத்தியுடன் சேவையாற்ற முன்வந்துள்ள அருட்பிரகாசம் ஜெயந்திரன் (சண்ஜெ) என்னும் வேட்பாளரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பது எமது முதற்கடமையாகும்.

இவர் யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாக கொண்டவரும் முன்னாள பிரபல வர்த்தகர் ச. வே. சண்முகம்பிள்ளையின் (நீர்கொழும்பு) பேரனும் திருவாளர் சண்முகம்பிள்ளை அவர்கள் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டார். குறிப்பாக உலக பிரசித்திபெற்ற தேர், காணிகள், கட்டடங்கள் (கோபுரம் உட்பட)...

முன்னாள் யாழ். கிளிநொச்சி சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ( Deputy director of health service ) டாக்டர் அருட்பிரகாசத்தின் புதல்வனும்......

இந்தியா சென்று மேற்படிப்பை மேற்கொண்டவரும்.........

தற்போது யாழ் சண்ஜெஸ் நிறுவனங்களின் உரிமையாளரும். கொக்குவில் மஞ்சவனப்பதி ஆலய நிர்வாகசபையின் தற்போதைய உப செயலாளரும் ( நிரந்தர நிர்வாக சபை உறுப்பினர்)

சர்வதேச அரிமா கழகத்தில் (lions clup) ஏறத்தாழ 12 வருடங்களாக சேவையாற்றியவரும்...

இவரது ஆற்றலையும் விவேகத்தையும் தமிழ் பற்றையும் அதன் தொண்டையும் அறிந்து நாம் எமது தமிழருக்கான போரால் பாதிக்கப்பட்ட மக்கள் கட்சியில் அங்கத்தவராக இணைத்து வேட்பாளராக்கியுள்ளோம்.

எமது கட்சியானது போரால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் எல்லா இன, மத ஆதரவாளர்களால் உருவாக்கப்பட்ட ஓர் தமிழ் தேசியக் கூட்டமைப்பாகும்... (TNA) இரட்டை இலை.

நாம் தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட ஜனநாயக ஐக்கிய முன்னணி
என்னும் கட்சியில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகின்றோம் இது எந்தவித பிறசக்திகளால் உருவாக்கப்பட்ட கட்சியல்ல என்பதை உறுதியாக கூறுகிறோம்.

இக் கட்சியில் வேட்பாளர்கள் அனைவருமே துடிப்பான உணர்வுள்ள தமிழ் பற்றுடன் சேவையாற்ற முன்வந்துள்ளவர்கள் என்பதையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.......

எமது முதன்மை வேட்பாளர் விநாயகமூர்த்தி சகாதேவன் பல அஹிம்சாவழிப் போராட்டங்கள் செய்து சில சிக்கலான பாதிக்கப்பட்ட தமிழர்களின் பிரச்சினைகளை வென்றெடுக்க அரும்பாடுபட்டவர்....

தந்தை செல்வாவின் அகிம்சாவழிமுறைக்கும் புரட்சித்தலைவர் M.G.R. அவர்களின் மக்களுக்கான செயற்திட்டங்களை மேற்கொள்ள அவரின் இரட்டை இலை சின்னத்திற்கு தங்கள் மகத்தான ஆதரவுகளை வழங்கி வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### 2013 வடமாகாண சபை தேர்தல். இந்த தேர்தலில் நாம் போட்டியிடுவதற்கான நோக்கம்

1. 13 ஆவது திருத்தச் சட்டத்தை நூற்றுக்கு நூறு அமுல்படுத்துவது மட்டுமல்லாது, மேலும் சிறுபான்மையினருக்குரிய அத்தியாவசியமான உரிமைகளை வென்றெடுக்க பாடுபடுவோம்.
2. உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட்டு சகலரையும் சொந்த இடத்தில் மீளக்குடியேற்ற ஆவன செய்வோம்.
3. பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்துவோம்
4. விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு யாழ்.மாவட்ட குளங்கள் புனரமைப்பதுடன் மழைநீர் மேலதிகமாக சேமிக்க கூடியவாறு புதிய குளங்கள் உருவாக்குவோம்.
5. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உட்பட முன்பிருந்த ஆனையிறவிலுள்ள குறுஞ்சாதீவு உப்புக் கூட்டுத்தாபனத்தை மறுசீர் அமைத்து அதன் உற்பத்தியைப் பெருக்கி பலருக்கு வேலைவாய்ப்பு வழங்குவோம்.
6. பரந்தன், இரசாயன தொழிற்சாலை, நீர்வேலி கண்ணாடி தொழிற சாலை, மண்டைதீவு மீளபதலிடல் தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை புதுப்பிப்பதுடன் புதிய தொழிற்சாலைகளை உருவாக்கி, புதிய பல வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம்.
7. கடல் உற்பத்தி பொருட்களை பதனிட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்போம்
8. பனம் பொருள் உற்பத்திகளை சர்வதேச மட்டத்திற்கு தரமுயர்த்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு உரிய வழி வகைகளை ஏற்படுத்திக் கொடுப்போம்.
9. வடமாகாண ஆட்டோ சங்கங்கள், தலைமை சங்கம், கிளை சங்கங்கள் அனைத்தும் மறுசீர் அமைத்து பிரச்சினைகள் தீர்க்கப்படும்.
10. இயற்கை வளமான காற்றைப் பயன்படுத்தி காற்றாடி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து எமது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்க ஆவன செய்வோம்.
11. விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் முகமாக சர்வதேச தரத்தில் விளையாட்டு அரங்கு சகல வசதிகளுடனும் அமைக்கப்படும்.

எமது மக்களின் இன்றைய தேவை உணர்ந்து எமது கட்சியானது ஐந்து மாவட்டங்களில் தனிப்பெரும் தமிழ் கட்சியாக துணிச்சல் மிக்க இளைஞர்களை வேட்பாளர்களாக கொண்டு போட்டியிடுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

**அச்சமில்லாத பிச்சையல்லாத தமிழ்ச் சமூகத்தை உருவாக்க ஒன்றுபடுவோம்.**

## ஜனநாயக ஐக்கிய முன்னணி


தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (TNA) இரட்டை இலை X

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ~~2~~ | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | ~~13~~ | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

(E - 017)




# மீண்டும் மந்திரவாதி



பொழுது விடிந்தது. குரு பிதற்றுவதைக் கண்ட சீடர்கள் அழத் தொடங்கினார்கள். அவர்களைப் பார்த்து அழவேண்டாம் என்று சைகை காட்டினார் குரு. அவர்களும் அழுவதை நிறுத்தினார்கள். மெல்லிய குரலில் அவர், "சீடர்களே! ஆசன சீதம் சீவன் நாசம் என்று ஞானி சொன்னாரே. அது உண்மையாகப் போகிறது. நான் சமாதி அடையப்போகிறேன்.

என் இடுப்புக்குக் கீழே சில்லென்று சீதளம் கட்டி விட்டது. இனி நான் பிழைக்க மாட்டேன். நான் இறப்பதற்கு நீங்கள் வருந்த வேண்டாம். ஒற்றுமையாக இருந்து மடத்தை நடத்துங்கள்" என்றார். அப்படியே மயக்கம் அடைந்தார். சீடர்கள் அழுது புலம்பத் தொடங்கினார்கள். சிறிது நேரம் சென்றது. மயக்கம் தெளிந்து கண் விழித்தார் அவர். மூடன் அவரைப் பார்த்து "குருவே! ஊரில் குறி சொல்லும் அங்கதன் ஒருவன் இருக்கிறான். அவனுக்குத் தெரியாத மந்திர தந்திரங்களே கிடையாது. உங்களுக்கு ஏதேனும் தோஷம் இருந்தால் அவன் பரிகாரம் சொல்வான். நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள்" என்று அழுது கொண்டே சொன்னான்.

இதைக்கேட்ட மடையன், "மூடா! ஏன் இதை முன்னரே சொல்லவில்லை. இப்பொழுதே ஓடிச் சென்று அங்கதனை அழைத்து வருகிறேன்" என்று புறப்பட்டான். சிறிது நேரத்தில் அங்கதனுடன் அங்கு வந்தான். குருவின் அருகே அமர்ந்தான் அங்கதன். அவர் "ஆசன சீதம் சீவன் நாசம் என்று பிதற்றுவதைக் கேட்டான்.

"குரு என்ன பேசுகிறார்?" என்று சீடர்களைக் கேட்டான். அவர்களும் நடந்ததை எல்லாம் சொன்னார்கள். உடனே அவன் சாமி வந்தவன் போலக் குதித்தான். எல்லாம் அந்தக் கிழவன் வைத்த சூனியம். அதுதான் குரு வைப்படாதபாடு படுத்துகிறது.

நான் மந்திர பூசை செய்கிறேன். அந்த சூனியத்தைக் கிழவனுக்கே திருப்பி அனுப்புகிறேன். ஆசன சீதம் சீவன் நாசம் என்றுதானே சொன்னான் அவன். நான் அதை ஆசன சூடு என்று மாற்றுகிறேன். அந்த மந்திரத்தைக் கிழவனுக்கே திருப்பி அனுப்புகிறேன். அந்தக் கிழவனும் சூடு கண்ட சில நாட்களில் இறந்துவிடுவான். என் மந்திரம் என்றும் பொய்யாகாது" என்று உணர்ச்சி பொங்க கத்தினான். அந்தக் கிழவனும் சூடு கண்டு சில நாட்களில் இறந்து விடுவான்.. இதைக் கேட்ட குரு கண் விழ்த்தார். உயிர் பிழைப்போம் என்ற நம்பிக்கை அவருக்கு வந்தது.

அங்கதனைப் பார்த்து அவர் "பூசையைத் தொடங்கு" என்றார். தன் திட்டம் வெற்றி பெற்றதை நினைத்து மகிழ்ந்தான் அவன். "மந்திர பூசை செய்ய நிறைய செலவு ஆகுமே" என்றான். "எவ்வளவு செலவானாலும் கவலை இல்லை. எங்கள் குரு பிழைத்தால் போதும்" என்றார்கள் சீடர்கள். தான் கொண்டு வந்திருந்த பெரிய பட்டியலைத் தந்தான் அங்கதன். "இதில் உள்ள பொருட்களை உடனே வாங்கி வாருங்கள்" என்றான்.

பட்டியலை எடுத்துக் கொண்டு சீடர்கள் ஊருக்குள் ஓடினார்கள். எல்லாப் பொருட்களையும் வாங்கிக் கொண்டு வேகமாகத் திரும்பினார்கள். அந்தப் பொருட்களை எல்லாம் பரப்பி வைத்தான் அங்கதன். நடுவே உலக்கை ஒன்றை வைத்துப் பூசை செய்வது போல நடித்தான். மந்திரம் என்று சொல்லி ஏதேதோ உளறினான்.

இப்படியே நீண்ட நேரத்தை ஓட்டினான். பிறகு அந்த உலக்கையை எடுத்து சீடர்களிடம் தந்தான். இனி உங்கள் குருவிற்கு எந்த ஆபத்தும் இல்லை. மந்திரம் சொல்லி எல்லாவற்றையும் போக்கி விட்டேன். ஆசன சீதம் என்று சூனியம் வைத்தானே கிழவன். அவனைப் பார்த்தால் இந்த உலக்கையால் மண்டையைப் பிளந்து விடுங்கள்" என்றான்.

உலக்கையை வாங்கிய சீடர்கள் "அப்படியே செய்கிறோம். அவன் மண்டையைப் பிளக்கிறோம்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னார்கள். அவன் பேசியதைஉண்மை என்று நம்பினார் குரு. படுத்திருந்த அவர் மெல்ல எழுந்து அமர்ந்தார். "மந்திர பூசை செய்து உங்கள் குருவைக் காப்பாற்றினேன். பத்துப் பணம் தாருங்கள்" என்றான் அவன்.

சீடர்களும் அவன் கேட்ட பணத்தைத் தந்தார்கள். குருவின் உடல் நலமும் நாளுக்கு நாள் தேறிக் கொண்டே வந்தது. ஒருநாள் இரவு அங்கே நல்ல மழை கொட்டியது. கூரையில் ஓட்டை இருந்தது. அது வழியாக மழைத் தண்ணீர் உள்ளே வந்தது. குரு படுத்திருந்த படுக்கையை நன்றாக நனைத்துவிட்டது.

விழித்த குரு தண் ஆசனப் பகுதியைத் தொட்டுப் பார்த்தார். சில்லிட்டு இருப்பதைக் கண்டு திடுக்கிட்டார். மழை பெய்ததையோ படுக்கை நனைந்ததையோ அவர் அறியவில்லை. சாகப்போகிறோம் என்ற அச்சத்தால் அவர் நடுங்கினார். ஆசன சீதம் சீவன் நாசம் என்று பிதற்றத் தொடங்கினார்.

அவர் பிதற்றலைக் கேட்ட சீடர்கள் அங்கு வந்தார்கள். படுக்கையில் ஈரத்தையும் குருவின் உடல் சில்லிட்டு இருப்பதையும் கண்டு திடுக்கிட்டார்கள். "ஐயோ! நம் குரு சாகப் போகிறாரே. அவரைக்காப்பாற்ற வழியே இல்லையா? என்று அழுதான் மடையன். அவனுடன் சேர்ந்து மற்ற சீடர்களும் "குருவே! நீங்கள் இல்லாமல் நாங்கள் என்ன செய்வோம்" என்று அழுது புலம்பினார்கள்.

அவர்கள் அழுகுரலைக்கேட்ட குரு மேலும் அச்சம் கொண்டார். பிதற்றிக் கொண்டிருந்த அவர் அப்படியே மயக்கம் அடைந்தார். பேச்சு மூச்சற்று அவர் கிடப்பதைப் பார்த்தார்கள் சீடர்கள். அவர் இறந்துவிட்டார் என்றே நினைத்தார்கள்.

உரத்த குரலில் அவர்கள் "குருவே! எங்களை விட்டுப்போய் விட்டீர்களே. நாங்கள் இனி என்ன செய்வோம்" என்று அழுது ஒப்பாரி வைத்தார்கள். அவர்களது அழுகுரல் எங்கும் கேட்டது. பரமார்த்தகுரு சமாதி ஆனார் என்ற செய்தி ஊரெங்கும் பரவியது. அவருக்கு மரியாதை செய்வதற்காக ஊர் மக்கள் அங்கே வந்தார்கள்.

குருவின் உடலைக் கட்டிப் பிடித்துச் சீடர்கள் அழுது கொண்டிருந்தார்கள். யாரையும் அவரின் அருகேயே நெருங்க அவர்கள் அனுமதிக்க வில்லை. கூட்டத்திலிருந்த பெரியவர் ஒருவர் "சீடர்களே! இப்படி அழுது கொண்டிருப்பதால் எந்தப் பயனும் இல்லை. இறந்தவர் திரும்பி வரப்போகிறாரா?

அவருக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடமைகளைச் செய்ய வேண்டாமா? முதலில் அவர் உடலை நீராட்டி எடுத்து வாருங்கள். பிறகு அவரை அடக்கம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம்" என்றார். அழுகையை நிறுத்திய சீடர்கள் குருவின் உடலைத் தூக்கினார்கள். தண்ணீர்த் தொட்டியில் அவர் உடலை வைத்து அழுத்தினார்கள். தண்ணீருக்குள் உடல் மூழ்கியதால் அவருக்கு மூச்சுத் திணறியது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள அவர் போராடினார். அவருக்கு மூச்சு இருப்பதை முட்டாள் சீடர்கள் அறியவில்லை. தண்ணீருக்கு உள்ளேயே அழுத்தி வைத்திருந்தார்கள். மூச்சுத் திணறி அப்படியே இறந்து போனார் அவர்.

மூட சீடர்களின் அறியாமையினால் முட்டாள் குரு இறந்தே போனார். மாலை மரியாதைகளுடன் பரமார்த்த குருவின் உடலைப் பல்லக்கில் வைத்தார்கள். ஊர்வலமாக அவர் உடல் எடுத்துச் செல்லப் பட்டது. சீடர்கள் அழுது புலம்பியபடியே அவரை நல்லடக்கம் செய்தார்கள்.



முற்றும்

# சுருளி மலை



ஆன்மீகம் 103

சுருளிமலை தேனி மாவட்டத்தில் உள்ள கம்பத்தில் உள்ளது. இது சுருளி வேலப்பரின் ஆதிஸ்தலமாகும். தெய்வம் நின்று பேசும் இடமுமாகும். சுருளி மலையின் பெருமையை அடியேன் சித்தர்பெருமானுடன் சேர்ந்து மலைப் பயணங்கள் செய்து அநுபவித்தேன். ஒவ்வொரு தைப்பூசமும் குருகடாக்ஷம் பெற எந்த மலைகளுக்கு பகவான் ஸ்ரீ காகமுனவர் அழைக்கிறாரோ இவ்விடம் அடியேன் உடனே அமாவாசை, பௌர்ணமி அன்று செல்வது வழக்கம்.

கைலாசத்தில் தவம் இருக்கும் கைலயங்கிரி சித்தரே இங்கு வெகு காலம் தவமிருந்த ஸ்தலம். இங்கு விபூதிகுகை, மாமுனிவர் அகத்திய முனிவர் வேள்வி செய்த இடமும், ஸ்ரீ போகமுனிவரின் அநேக வைப்புப் பொருட்களும் அநேக சித்தர்கள் இன்றும் சூட்சுமமாக வாழும் குகைகளும் சப்தமாதாக்கள் இன்று வரை உள்ள சக்தியும் பகவான் ஸ்ரீராம கிருஸ்ணர் வணங்கிய காளியின் சொந்த வீடும் காளி குகையும் கிருஸ்ணபகவான் குகையும் இவ்விடத்திலுண்டு.

முகமதியர்கள் வழிபடும் மஸ்தான் குகை மிக பெரிய அளவில் சன்னாசியப்பர் வனம் போகிற பாதையில் இருக்கிறது. இங்கு பீகர் முகமது என்பவர்க்கு கோர்ட்டில் தூக்குத் தண்டனை வழங்கும் நேரத்தில் உமது விருப்பம் என்னவென்று வெள்ளைக்கார நீதிபதி கேட்டபோது அடியேன் ஒரு பாட்டுப்பாட வேண்டும் என்று கூறி நீதிபதியிடம் அனுமதி பெற்று பீர்முகமது அவர்கள் சுருளி மலை வாழும் சீலா அன்னை தோத்தரிக்கும் பாலா என்று சுருளி முருகனை நினைத்துப் பாடினார். நீதிபதி உறங்கிட, தண்டனை நேரம் தவறிட, தூக்கில் இருந்து காத்த சுருளி முருகனின் அதிசயம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

சித்தர்பெருமான் சமாதியான பிறகு அடியேன் எங்கு சென்று தங்குவது என்ற நிலை உருவானபோது அடியேன் சுருளியில் இரண்டுமாதங்கள் தனியே தவத்தில் இருந்தேன். இங்கு ஐந்து தலைநாகம் பாறைவடிவில் காணப்படுகிறது. இங்கு அடியேனுக்கு பசி ஏற்



சுருளி மலை ஆற்றோரம்

பட்டபோது சப்தகன்னி மாதாக்கள் சர்க்கரைப்பொங்கல் செய்து வழங்கினார்கள். அடியேன் கைலாச குகையில் படுத்திருந்தபோது சேகண்டி, மணி ஆகியன ஒலிக்கும் சப்தம் கேட்டது. அங்கு எழுந்தருளியுள்ள அநுமான் மிகப்பெரிய ரூபத்தில் காட்சி கொடுத்து அடியேனிடம் ஐந்து கிலோ முருங்கைக்காய் சாம்பார் வைத்துத்தரும்படி வேண்டினார் இங்குள்ள அம்பாள் குகையில் படுத்திருந்த போது தேவர்கள் பேசுவது கேட்டது. இங்கு எழுந்தருளியுள்ள அம்பாள் என்னை சூட்சுமமாக ஒரு வீட்டிற்கு அழைத்துச் சென்று இட்டலி செய்து கொடுத்தார்கள். அம்பாளை சுற்றி பச்சை நிறப் பாம்புகள் காணப்பட்டன.

மெய்யன்பர்களே! இங்குள்ள குகைகளுக்கு சித்தர்களின் வழி நின்று அருள் பெற்ற குருமார்களின் துணையுடன் பரிபூரண குருவருள் பெற்ற நன்மக்களே செல்ல வேண்டும் என அடியேனால் எச்சரிக்காமல் இருக்க முடியாது.

அடியேன் இங்கு தவத்திலிருந்த போது எனது குருநாதர் சித்தர்பெருமான் எழுந்தருளி எனது தவத்தை நிறுத்தி விட்டு மக்களிடம் சென்று தருமத்தை போதிக்கும்படி கட்டளையிட்டார். அடியேன் அக்கட்டளையை சிரமேற்கொண்டு இன்றுவரை அதர்மம் தலைவிரித்தாடும் இக்கலி யுகத்தில் தரும உணர்வை ஏற்படுத்த பாடுபடுகிறேன்.

இங்கு பல வருடங்களாய் வாழந்த மௌன ஜெகநாத சுவாமிகள் 20 பேர் தங்கும் அளவுக்கு ஆச்சிரமம் கட்டியுள்ளார். சுருளிமலையில் வேடன் ரூபத்தில் ஸ்ரீ பிரம்ம ஸ்ரீ தலையாட்டிச்சித்தரிடம் தீட்சை பெற்று இன்று வரை 80 வயதுக்கு மேலாகினாலும் இந்து சமயம் அறநிலையத்துறை வாட்சுமேன் உத்தியோகம் பார்க்கும் ஸ்ரீ மகான் கரும்பு தேவரை ஒரு சித்தர் புருஷர் என்று கூறலாம்.

இங்கு ஒருமுறை இந்து சமய அறநில்யத்துறை உபகாரிகள் ஐயா திரு. ராமதாஸ் அவர்களை கைலாச குகைக்குள் அழைத்துச்சென்றேன். அவர் சித்தர்களிடம் பல ஆசிகள் பெற்றுள்ளார்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

தொடரும்

# யூதக் குழந்தைகள் அதிசாமர்த்தியசாலிகளாக இருக்கின்றார்கள்...!

இசைக் கருவி வாசிக்கும் பழக்கம் குழந்தைகளின் ஷ்ஸு வை அதிகரித்து அவர்கள மேதைகள் ஆக்கும். இசை அதிர்வுகள் மூளையைத் தூண்டிவிட்டு அதன்



திறன்பாட்டை அதிகரிப்பதால் யூதர்களிடையே மேதைகள் அதிகம் என்கிறார் ஒரு யூத விஞ்ஞானி.

முதல் வகுப்பிலிருந்து 6 ஆம் வகுப்புவரை குழந்தைகள் வணிகக் கணிதவியலை படிக்கிறார்கள். விஞ்ஞானப் பாடம் முன்னுரிமை பெறுகிறது. கலிபோர்னியா குழந்தைகளையும் யூதக்குழந்தைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் கலிபோர்னியா குழந்தைகள் 6 வருடம் பின் தங்கி இருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

யூதக்குழந்தைகள் வில்வித்தை, துப்பாக்கி சுடுதல் ஆகிய உடல், மனம் சார்ந்த விளையாட்டுக்களில் ஈடுபடுகிறார்கள். இவ்விரண்டு விளையாட்டுக்களும் மனதை ஒரு முகப்படுத்தி துல்லியமான நுட்பமான முடிவு எடுக்க உதவுகின்றன.

உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் விஞ்ஞானம் படிக்க அதிகம் விழைகிறார்கள்.

போர்த்தளவாடங்கள், மருத்துவம், தொழில்நுட்பம் ஆகியவற்றில் செயலாக்கங்கள், புதிதாக பொருட்கள் செய்வது என்று பல்வேறு முறைகளில் தாங்கள் படித்தவற்றை நடைமுறைப் படுத்துகிறார்கள். இந்தத் திட்டங்கள் உயர் கல்வி நிறுவனங் களிலும் பல் தொழில்நுட்ப கழகங்களிலும் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

வணிகம் சொல்லித்தரும் ஆசிரியருக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. வணிகவியல் படிக்கும் மாணவர்கள கடைசி வருடம் ஒரு செயல்முறை திட்டத்தை நடைமுறைப்படுத்திக் காட்ட வேண்டும். 10 பேர்கள் அடங்கிய அவர்களது குழுமத்திற்கு இந்த செயன்முறை திட்டத்தில் 10 மில்லியன் யு.எஸ். டாலர் லாபம் கிடைத்தால்தான் அவர்கள் தேர்வு பெறுவார்கள்.

இந்தக் காரணத்தினாலேயே உலக வர்த்தகத்தில் பாதிக்கும் மேல் யூதர்கள் வசம் இருக்கிறது உலகப் புகழ்பெற்ற லீவாய்ஸ் பொருட்கள். இஸ்ரேல் பல்கலைக்கழக வர்த்தகம் மற்றும் புதிய பாணி உடை வடிவமைப்பு ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டதாகும்.

யூதர்க்ள பிரார்த்தனை செய்யும் போது கவனித்து இருக்கிறீர்களா? எப்போதும் தலையை அசைத்து அசைத்துப் பிரார்த்தனை செய்வார்கள். இப்படிச் செய்வதால் மூளை தூண்டிவிடப்பட்டு மூளைக்கு அதிக ஆக்ஸிஜன் கிடைக்குமாம்.

இவர்களைப் போலவே ஜப்பானியர்களும் சிரம் தாழ்த்தி வணங்குபவர்கள். சுஷி உணவை (புதிதாகப் பிடிக்கப்பட்ட மீன் உணவு) விரும்பி உண்பார்கள். இந்த இரண்டு இனங்களுக்கும் பல ஒற்றுமை இருப்பதை தற்செயல் என்று சொல்லலாமா?

நியூயோர்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனம் அவர்களுக்குப் பலவகையில் உதவுகிறது. யாருக்காவது பயன்தரும் வர்த்தக யோசனை இருந்தால் வட்டி இல்லாக் கடன் கொடுத்து அவர்களது வர்த்தகம் தழைக்க எல்லா வகையிலும் உதவுகிறது. இதனாலேயே ஸ்டார்பக்ஸ், டெல் கம்ப்யூட்டர்ஸ், கோகோகோலா, ஆரக்கிள், லீவாய்ஸ், டன்கின் டோனட், ஹாலிவுட் படங்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான வர்த்தகங்கள இவர்களது ஆதரவில் நடைபெறுகின்றன.

யூத மருத்துவ பட்டதாரிகள் நியூயோர்க்கில் அமைந்திருக்கும் யூதர்களின் வர்த்தக நிறுவனத்தின் வட்டியில்லாக் கடனைப்பெற்று தனியாக



டாக்டர் தொழில் நடத்தலாம். இதனால் நியூயோர்க், கலிபோர்னியா நகரங்களில் மருத்துவ மனைகளில் போதுமான டாக்டர்கள் இருப்பதில்லை.

2005 இல் சிங்கப்பூர் போயிருந்த போது ஒரு விடயம் என்னை வியப்பில் ஆழத்தியது. இங்கு சிகரெட் பிடிப்பவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்டவர்காளவே பார்க்கிறார்கள். இஸ்ரேல் நாட்டைப் போலவே இங்கு சிகரெட் பிடிப்பது தீய பழக்கம் என்று கருதப்படுகின்றது. ஒரு சிகரெட் பெட்டியின் விலை 7 யு.எஸ். டாலர்கள்! அரசாங்கமும் இஸ்ரேல் நாட்டு அரசாங்கம்போலவே தான் சிங்கப்பூர் மிகச்சிறிய நாடு. மன்ஹாட்டன் அளவே இருந்தபோதும் உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்கள் இங்கு இருக்கின்றன.

இந்தோனேசியாவைப்பாருங்கள். ஒரு பாக்கெட் சிகரெட்டின் விலை வெறு 0.70 யு.எஸ். டாலர்தான். எங்கு பார்த்தாலும் மக்கள் சிகரெட் பிடித்துக்கொண்டு இருப்பார்கள். பலன்? லட்சக்கணக்கான மக்கள் தொகை இருந்தும் விரல் விட்டு எணக்கூடிய அளவில்தான் பல்கலைக்கழகங்கள் பெருமைப்பட்டுக்கொள் ளக்கூடிய தொழில்நுட்பமோ தயாரிக்கும் பொருட்களோ எதுவுமே இல்லை அவர்களிடம்! அவர்களது மொழியைத் தவிர வேறு மொழி தெரியாது. ஆங்கில மொழியைக் கற்றுக் கொள்ள எத்தனை சிரமப்படுகி றார்கள். இவையெல்லாம் சிகரெட் பிடிப்பதால்தான். சிகரெட் பிடிப்பவர்களின் அடுத்த தலைமுறை அறிவற்றாகத் தானிருக்கும்.

நம்மால் யூதர்களைப் போன்ற புத்தசாலி தலைமுறையை உருவாக்க முடியுமா?

முற்றும்

எழுத்தாளர் டாக்டர். ஸ்ரீபன்
கார்ர் லியேன்

# நீதியான தேர்தல் நடைபெறும் என்பது சந்தேகம்தான்

## பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து

(யாழ்ப்பாணம்)

**தேர்தல் பிரசாரங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தலையிடுவதனால் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நீதியற்ற தேர்தலாக இருக்கும் என அஞ்சப்படுகிறது என தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையம் தெரிவித்துள்ளது.யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 6 மணியளவில் நடைபெற்ற ஊடக கலந்துரையாடலின் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.**

தேர்தல் வன்முறையைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் நடைபெறுகின்ற மாகாண சபைத் தேர்தல்கள் பெரும்பாலும் பெரிதாக பேசப்படுவதில்லை. அதற்கான காரணம் அவை வழக்கமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

ஆனால்வடக்குமாகாணசபையை பொறுத்தவரையில் இதுதான் யுத்தத்திற்கு பின்னரான முதலாவது தேர்தலுமாகும்.

நடைபெறவுள்ள இத்தேர்தல் நீதியானதும் சுதந்திரமாகவும் நடைபெற வேண்டுமென்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

இத்தேர்தல் நீதியானதாக நடைபெற வேண்டுமெனில் தேர்தலுக்கு முன்பான நாட்களில் வன்முறைகள், அச்சுறுத்தல்கள் நடைபெறுவதை முற்றாக தவிர்த்தல் வேண்டும்.

நாம் வடக்கிற்கு விஜயம் செய்து 5 மாவட்டங்களிலும் கட்சி உறுப்பினர்கள், உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோரையும் சந்தித்துள்ளோம்.

இச் சந்திப்புக்களின் மூலம் நீதியான தேர்தல் நடைபெறுமா? என்ற அச்சம் அனைவரிடத்திலும் நிலவுவதை எம்மால் அவதானிக்க முடிந்தது.

குறிப்பாக, இவ் அச்சத்திற்கு பிரதான இரண்டுகாரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று இராணுவத்தினர் வாக்காளர் பட்டியலை பெற்று அவர்களின் வீடுகளுக்கு சென்று மிரட்டுதல்.

மற்றொன்று தேர்தலுக்கு முன்னதான நாட்களில் நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் நிதியான விசாரணைகளை நடத்தி உரிய நடவடிக்கை எடுத்தமையாகும்..

இவ் இரு சட்ட விரோத சம்பவங்களும் அண்மையில் வட பகுதியில் நடைபெற்ற சம்பவங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நேர்மையான தேர்தல் தொடர்பில் ஊடகங்கள் மக்களுக்கு தெளிவை ஏற்படுத்துவதோடு, வேட்பாளர்களும் சரியான முறையில் செயற்படுவதன்மூலம்தான் மக்களின் அச்ச நிலையை இல்லாது செய்து தேர்தலில் வாக்களிப்புச் செய்வதற்கு உதவும் என்றார்.

மேலும் இச்சந்திப்பின்போது ஏனைய பணிப்பாளர்களான உதய கரளுத்தாரன, சுனில் ஜயசேகர ஆகியோரும் யாழ்.மாவட்ட இணைப்பாளர் மணிமாறன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். (அ-4)

## ஜப்பான் நிதியுதவி

தேசிய நல்லிணக்கமே நாட்டின் நீண்ட கால அபிவிருத்தியைத்தக்க வைக்கும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது. முல்லைத்தீவிலுள்ள மீனவ சமூகத்தின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையி ல் 283, 432 பொலர்களை நேற்றைய தினம் ஜப் பான் அரசாங்கம் வழங்கியது.

இந்த நிதி மூலமான செயற்றிட்டம் ஜப்பானிய அரச சார்பற்ற அமைப்பான பார்சிக் என்ற அமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப் படவுள்ளது. இந்த அரச சார்பற்ற அமைப்பு 2004 ஆம் ஆண்டு முதல் வடக்கில் பல அபி விருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத்தின் ப்ரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கமம் நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதன்படி அளவெட்டி சுவாமி நாதசர்மா அரவிந்த சுப்பிரமணிய சர்மா, கொழும்பு சுவாமி நாத சர்மா அனந்த நாராயண சர்மா ஆகியோரின் பாடல் கச்சேரி இடம்பெறும்.

---

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா வழங்கும் பாரதவம்சம் பற்றிய இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று ஞாயிற்றுக்கிழமை **கிருஷ்ணன் தூது** என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

---

நல்லூர் கந்தன் மஹோற்சவத் தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணிவரையும் யாழ்.சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வில் இன்று **ஸ்ரீ மத் பகவத் கீதை** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

---

நல்லைக் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வவுனியா கோவில்குளம் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளக மாணவர்கள் வழங்கும் சங்கீத இசைக் கச்சேரி, வயலின் இசைக் கச்சேரி ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

---

நல்லூர் முருகன் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசை யரங்கு மாலை 6.45 முதல் இரவு 8.15 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை பொன் ஸ்ரீ வாமதேவன் வழங்கும் பாடல் கச்சேரி இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக வயலின் கே.குகபரன், மிருதங்கம் எஸ்.துரைராசா, கடம் கே.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

---


நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவகாலத்தில் தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்றைய நிகழ்வுகளாக ஆசிரியர் க. ஈஸ்வரன் வழங்கும் **வாழ்வியலில் சமயம்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து நீர்வேலி காமாட்சி அம்மன் அறநெறிப்பாடசாலை, ஆவரங்கால் அருள்முருகன் அறநெறிப்பாடசாலை, மாவிட்டபுரம் பிருந்த கானலாலய அறநெறிப்பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகள் இடம்பெறும். அத்துடன் விசேட நிகழ்வாக பேராசிரியர் நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களின் இசை ஆராதனை இடம்பெறவுள்ளது.

---

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக்கழகத்தினால் நடத் தப்படும் தெய்வீகப் பேருரை கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் பிற்பகல் 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணிமண்டபத்தில் நடைபெறும். இதன்படி இன்று ஞாயிற்றுக்கிழமை வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் வழங்கும் **ஆறுமுகமான பொருள்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

# நல்லூரான் திருவடிக்கு வேல் விமானத்திருவிழா



## நமக்கொரு தீர்வை விரைவில் தா

தங்கரதத்தில் தேவியர்கள் சகிதம் இன்று வருபவனே!
சரவணப் பொய்கையில் செந்தாமரை மலரில் உதித்தவனே!
கார்த்திகைப் பெண்களிடம் பாலுண்டு வளர்ந்தவனே!
ஆறுமுகங்களும் ஒன்றிணைய ஆறுமுகசாமி எனப் பெயர் பெற்றவனே!
கானமயில் மீதேறி சேனையோடு அசுரக்குழாம் சிதைத்தவனே!
முல்லைச் சிரிப்பாலே நாடிய பக்தர்கள் துயர் தீர்ப்பவனே!
தொல்லைகள் நீக்கி எம்மக்கள்துயர் களைபவனே!
நல்லை நகர் நாதா நமக்கொரு தீர்வை விரைவில் தா!

க.கனகசபை,
சண்டிலிப்பாய்.

## தீராப் பிணியையும் தீர்த்திடுவார்



தீராப் பிணியையுந் தீர்த்திடுவார்
வெய்ய தீவினைகள்
வாராமல் வந்தெம்மைக் காத்திடுவார்
எங்கள் வாழ்வினிலே
போராடும் ஐம்புலக் கொற்ற மடங்கப்
பொசுக்கிடுவார்
சீராரும் நல்லைப் பெருமான்
வணங்கிடில் அக்கணமே!

கவிமணி கந்தமுருகேசதாசனர்

## ஆணவந் தன்னை அழி



வெங்களமாடி வீணரை அழித்த வேலா
எங்களவர் திருந்தி ஏற்றமுற - பங்கமில்
வேணவாக் கொண்டேன் வேலேடுத்து வீசியவர்
ஆணவந் தன்னை அழி

அடுத்தவரை மதியார் ஆணவங் கொண்டே
அடுத்துக் கெடுத்து அலைவார் - வடுக்கொண்ட
வீணர்கள் தம்மேல் வேலெடுத்து வீசியவர்
ஆணவந் தன்னை அழி

செ.சுதாகரன்,
மட்டுவில்.

## நல்லூர் கந்தன் அநுபூதி



இடர்கள் எனைவந் திடறா மலருட்
சுடர்வே லவனே தொடரா மல்வினைப்
பட 'வூழ்' வினைகள் பறந்தோ டிடவே
உடனே யருள்வாய் உயர்நல் லூரா!

கலாபூஷணம், சந்தக் கவிஞர். நவ.பாலகோபால்



# மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுங்கள்

## ஜனாதிபதியிடம் நவிபிள்ளை வலியுறுத்து

(கொழும்பு)

**பொதுமக்களிடையே சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளார்.**



இருவருக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு எடுத்துரைத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பௌதிக அபிவிருத்திகளுடன் சேர்த்து பொது மக்களிடையே சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றைக் கட்டியெழுப்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமானது.

அத்துடன் சிறுபான்மையினத்தவர்களின் மத ஸ்தலங்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை அவசியமெனவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அவசியமான சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அவர் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதியுடனான ஐ.நா. ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் சந்திப்பைத் தொடர்ந்து அங்கு ஆராயப்பட்ட விடயங்களை ஜனாதிபதியின் சர்வதேச ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

அதில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை யுத்தத்தின் பின்னர் இலங்கை பெற்றுள்ள வெற்றிகள் குறித்து ஜனாதிபதிக்கு பாராட்டு தெரிவித்ததாகவும் வடக்கு மற்றும் கிழக்குக்கான தனது விஜயத்தின் போதே புனர்நிர்மாணம், மீள்கட்டுமானம், சுகாதாரம் மற்றும் கல்வி தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைத் தன்னால் அவதானிக்க முடிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் எந்தவொரு பகுதிக்கும் சுதந்திரமாகச் சென்று வர ஐ.நா. மனித உரிமை ஆணையாளருக்கு வழங்கப்பட்ட வசதி குறித்து இதன்போது ஜனாதிபதி அவரிடம் வினவினார்.

இதற்குப் பதிலளித்த ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை, புனர்நிர்மாணம் மற்றும் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதியான உங்களது கவனத்தை பாராட்டுகிறேன் என பதிலளித்தார்.

இதனையடுத்தே சமத்துவம் மற்றும் நல்லிணக்கம் என்பவற்றையும் கவனத்தில் கொள்ளுமாறு ஜனாதிபதியிடம் நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

மோதல்கள் நிறைவடைந்ததன் பின்னர் இலங்கையில் முன்னெடுக்கப்படும் வெற்றிகள் தொடர்பில் நவநீதம்பிள்ளை தன்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

காணாமற் போனவர்களைக் கண்டறிவதற்காக குழு ஒன்று நியமிக்கப்பட்டது தொடர்பிலும் காணாமற் போனதை குற்றமாக கருதி சட்டத்தில் மாற்றங்களை கொண்டு வருவதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளையும் அவர் வரவேற்றுள்ளார்.

சிறுபான்மை மக்களின் வணக்கஸ்தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறான எதிர்பாராத வகையில் சம்பவங்கள் திட்டமிட்டு முன்னெடுக்கப்படுவதொன்றல்ல என்றும் திடீரென நடைபெறும் சம்பவங்கள் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையை நாட்டு மக்கள் பக்கச்சார்பானது என கருதுகின்றனர். உங்களுடைய அறிக்கை கூட முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டதொன்றென மக்கள் கருதுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபை பரந்துபட்ட நிறுவனம் என்ற அபிப்பிராயம் பரவலாக மக்களிடம் காணப்படுகிறது என இதன்போது தெரிவித்த ஜனாதிபதி, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் அறிக்கையானது சுதந்திரமானதாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

என்னுடைய அமைச்சரவையில் பல்வேறு கொள்கைகள், சிந்தனைகளைக் கொண்ட குழுவினர் இருக்கின்றனர். எனினும் பொதுக் கொள்கையின் கீழ் அவர்களை வழிநடத்துவதற்கு தன்னால் முடிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம, ஜெனீவாவிற்கான இலங்கையின் வதிவிட பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, ஆணையாளர் நவநீதம்பிள்ளை விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை இரத்துச் செய்தல், வடக்கில் இராணுவத்தை அகற்றுதல், பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 800 புலி உறுப்பினர்களை விடுதலை செய்தல் மற்றும் பொலிஸ் திணைக்களத்தை நீதி அமைச்சிடம் ஒப்படைத்தல் போன்ற கோரிக்கைகள் அவரால் விடுக்கப்பட்டுள்ளன.

நவநீதம்பிள்ளையின் மேற்குறித்த அனைத்துக் கோரிக்கைகளும் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியதென அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே, இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளப் போவதில்லையென அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் கோரிக்கைக்கு அமையவே இவ்வாறு நவநீதம்பிள்ளை கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்களப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மேர்வினின் கருத்துக்கு மன்னிப்பு கோரினார் அமைச்சர் நிமால்

மேர்வின் சில்வாவின் கருத்திற்கு ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

நவநீதம்பிள்ளையை திருமணம் செய்து கொள்ள விரும்புவதாக அண்மையில் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்திருந்தார். இந்த கருத்து அடங்கிய வீடியோ காட்சி அண்மையில் அவருக்கு காண்பிக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்வையிட்ட நவநீதம்பிள்ளை கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

குறித்த கருத்து தொடர்பில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நவநீதம்பிள்ளையிடம் மன்னிப்பு கோரியுள்ளார். ஹில்டன் ஹோட்டலில் வைத்து நிமால் சிறிபால டி சில்வா இவ்வாறு மன்னிப்பு கோரியதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டுக்கு விஜயம் செய்துள்ள உயர் ஐக்கிய நாடுகள் அதிகாரிக்கு எதிராக இவ்வாறு அமைச்சர் ஒருவரைக் கருத்து வெளியிட அனுமதித்தமை கண்டிக்கப்பட வேண்டியது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார். (அ-2)

# நவிபிள்ளையை இழிவுபடுத்திப் பேசிய மேர்வினுக்கு வைகோ கண்டனம்

(சென்னை)

நீதிக்காகவே வாழ்கின்ற மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையை திருமணம் செய்து கொள்கிறேன் என இலங்கை அமைச்சர் மேர்வின் சில்வா கூறிய திமிர் பேச்சுக்கு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ஐ.நாவின் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை, ஈழத்தமிழர் படுகொலை குறித்த உண்மைகளைக் கண்டறிய தமிழர் பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்து கொடுந்துயருக்கு ஆளானவர்களை சந்தித்ததை பொறுத்துக் கொள்ள முடியாது இலங்கை அமைச்சர் மேர்வின் சில்வா நவநீதம்பிள்ளையை வேண்டுமானால் நான் திருமணம் செய்து கொள்கிறேன். இலங்கையைச் சுற்றிக் காட்டுகிறேன் என்று கொச்சைப்படுத்தி இருக்கிறார்.

நீதிக்காகவே வாழ்கின்ற நவநீதம்பிள்ளையை இப்படி இழிவுபடுத்தி அமைச்சர் ஒருவர் பேசுகிறார் என்றால் இலங்கை அரசின் கோர முகத்தை இப்போதாவது தமிழ் நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

மேர்வின் சில்வாவைப் பெற்ற தாயை, அவர் குடும்பத்துப் பெண்களை இப்படிக் கீழ்த்தரமான முறையில் யாராவது கூறினால் அவருக்கு எப்படி இருந்திருக்கும்.

மற்றொரு அமைச்சர் விமல் வீரவன்ச, முள்ளிவாய்க்கால் முல்லைத்தீவு பகுதிகளுக்கு அம்மையார் நவநீதம்பிள்ளை சென்றதே தவறு என்று கூறியதுமட்டு மல்லாமல் அவர் தென்னாபிரிக்காவின் வம்சாவழித் தமிழர் என்பதால் இலங்கை அரசுக்கு எதிராகச் செயற்படுகிறார் என்றும் குற்றச்சாட்டி இருக்கிறார்.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தற்பொழுது வெளிநாட்டில் இருந்தவாறே நவநீதம்பிள்ளையும் மனித உரிமைகள் ஆணையமும் இலங்கை அரசுக்கு எதிராக செயற்படுவதாகக் குற்றம் சாட்டுகிறார்.

தமிழர்களுக்கான நீதியை நிரந்தரமாக குழிதோண்டிப் புதைக்கவே இலங்கை அரசு திட்டமிட்டு இப்படிப் பேசி வருகிறது.

ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்து மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை துணிச்சலாக அறிக்கை கொடுத்ததனால்தான் நடந்த இனக்கொலை ஓரளவுக்காவது உலகத்துக்கு தெரிய வந்தது.

மேர்வின் சில்வாவின் காட்டுமிராண்டிப் பேச்சுக்கு கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்.

தமிழர்களுக்கு எதிராக அராஜக வெறியாட்டம் போடும் இலங்கை அரசின் ஜனாதிபதியை பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமைப்புக்கு தலைவராக்க இந்தியாவின் காங்கிரஸ் அரசு வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்வதை தமிழக மக்களும் குறிப்பாக இளைஞர் சமுதாயமும் மனதில் கொண்டு இந்தத் துரோகங்களை எதிர்த்துப் போராட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என்றுள்ளது. (அ-2)

## ஐ.நா. அலுவலகத்திற்கு பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகளின் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்தில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை தமது விஜயத்தின் நிறைவாக நேற்றையதினம் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார். இதற்கிடையில் நவநீதம்பிள்ளையிடம் மனு ஒன்றைக் கையளிக்க வேண்டும் என்று பௌத்த பிக்குகள் கூறியுள்ளனர். அவ்வாறு அவரை சந்திக்க முடியாது போயின் அவருடைய வாகனத்தை சுற்றி வளைக்கப் போவதாகவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

இதனை முன்னிட்டே பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# "யார் இந்த டேவிட்...?"

நடுங்கும் விரல்களால் ஒரு இட்லியைக்கூட அவரால் பிய்த்துஉண்ண முடியவில்லை. அதிகபட்சம் ஓர் இட்லி அல்லது பாதி தோசைதான் அவருடைய உணவு.

ஒழுங்கு செய்யப்படாமல் கலைந்துகிடக்கும் நூல்கள், ஒரு தண்ணீர் கேன், பழைய கட்டில்- இவைதான் 90 வயது டேவிட் ஐயாவின் வசிப்பிடத்தை அலங்கரிக்கும் பொருட்கள்.

**யார் இந்த டேவிட்?**

என்னை எல்லோரும் டேவிட் ஐயா என்றுதான் சொல்வார்கள். என் பெயர் சாலமோன் அருளானந்தம் டேவிட். இலங்கை அரசின் பயங்கரவாதப் பிரிவு போலீசிலும் இந்தியாவிலும் இந்த 90 வயதுக் கிழவனின் பெயரை இப்படித்தானப்பா பதிந்திருக்கிறேன் என்று மெலிதாகச் சிரிக்கும் டேவிட் ஐயா அந்திமக் காலத்தை யாருமற்ற தனிமையோடு சென்னையில் கழிக்கிறார்.

இலங்கையின் கரம்பனில் 1924 ஆம் ஆண்டு பிறந்தேன்: ஆணும் பெண்ணுமாக நாங்கள் ஆறுபேர். சிறுவயதிலிருந்தே ஓவியங்கள் கீறுவதில் ஆர்வம். மிட்டாய் டப்பாவில் இருக்கும் படங்களை பெரிய கட்டடங்களை எல்லாம் கீறுவேன். அந்தப் பிரியமோ, என்னவோ, ஒருவழியாக டிராஃப்ட்ஸ் மேனிப் (கட்டட வரைவியலாளர்) படிப்பை முடித்து ஆர்க்கிடெக்ட் ஆனேன். அழகான பூக்களையும் பறவைகளையும் வரைவதுதான் எனது விருப்பமாக இருந்தது என்று குழந்தையைப்போலப் பேசும் டேவிட் ஐயா, இலங்கைப் பொதுப் பணித் துறையில் கட்டடக் கலைஞராகப் பணி செய்தவர். மேற்படிப்புக்காக 50 களில் ஆஸ்திரேலியா சென்று நைஜீரியா, கென்யா உள்ளிட்ட நாடுகளில் நகர வடிவமைப்பாளராகப் பணியாற்றியவர்.

மாதம் ஒன்றுக்கு சுமாராக 50,000 ரூபாய் வரை ஊதியம் கிடைத்தது. 60-களில் இது பெரிய பணம். கென்யாவின் மும்பாஸாவில் ஒரு வாசகச் சாலை இருந்தது. அங்குதான் எனக்கு காந்தியடிகளின் அறிமுகம் கிடைத்தது. எனது சொந்த தேசத்தின் இனவெறியைப் புரிந்துகொள்ள, காந்தியின் எழுத்துக்கள் எனக்கு உதவின. ஒரு பக்கம் தாயகத்தில் மக்களின் துயரமும், காந்தியை வாசித்த உத்வேகமும் என்னை வேலையை துறந்துவிட்டு ஈழத்துக்குச் செல்லத் தூண்டியது.

70-களின் தொடக்கத்தில் நான் ஈழத்துக்கே வந்தேன். கல்வியும் விவசாய உற்பத்தியுமே சுயமான பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் என்பதால், நானும் லண்டனில் இருந்த புகழ்பெற்ற மருத்துவர் ராஜசுந்தரமும் காந்தியம் என்ற அமைப்பைத் தொடங்கினோம். அவரும் லண்டனை விட்டு வவுனியாவுக்கு வந்தார்.

மலையக மக்களின் கல்வியில் பெரும்பங்காற்றியது காந்தியம் அமைப்பு. தொடங்கிய மிகக் குறுகிய காலத்திலேயே காந்தியம் அமைப்பு வளர வளர அரசியல் சூழலில் ஆயுதப் போராட்டத்தின் வீச்சும் இளைஞர்களிடம் வேகம் பெற, எங்களின் கல்விப் பண்ணைக்கு பல போராளிகள் வந்து செல்லத் தொடங்கினர். இலங்கை அரசின் பார்வை, எங்கள் மீது விழுந்தது.

இலங்கையில் ஆயுதப் போராட்டம் வேர்விட்டபோது தந்தை செல்வாவின் அஹிம்சைப் போராட்டத்தின் மீது எனக்கு நம்பிக்கையும் ஆர்வமும் இருந்தது. அப்போது சந்ததியார் என்றொருவர் எங்கள் பண்ணைக்கு வருவார். அவர் பிளாட் அமைப்பின் முக்கியப் பிரமுகராக இருந்தார். சில கட்டுரைகளைக் கொடுத்து மொழியாக்கம் செய்யச் சொல்வார். நானும் செய்துகொடுப்பேன் அவருடன் ஆயுதப்போராட்டம் பற்றி விவாதிப்பேன்.

போராளிக் குழுக்கள் வன்முறை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது எங்களின் காந்தியம் அமைப்பை, பயங்கரவாத அமைப்பு என்று இலங்கை அரசு தடைசெய்தது.

1993 ஏப்ரலில் நானும் ராஜசுந்தரமும் கைதாகி நான்காவது மாடி என்ற சித்திரவதை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வெலிக்கடை சிறையில் அடைபட்டோம். அங்கே ஏராளமான போராளிகள் ஏற்கனவே அடைபட்டு இருந்தார்கள்.

முக்கியமான பல பிரமுகர்கள், மேல் மாடியில் வைக்கப்பட்டு இருந்தனர். அப்போதுதான் அந்தப்பயங்கரம் நடந்தது.

ஒரு ஜூலை 25ம் தேதி அங்கு அடைக்கப்பட்டிருந்த 35 தமிழ் கைதிகள் சிங்களக் கைதிகளால் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள்.

உயிர் தப்பியிருந்த நாங்கள், எங்களை வேறு சிறைக்கு மாற்றக்கேட்டோம். ஆனால், இலங்கை அரசு காது கொடுக்கவில்லை. இரண்டு நாட்கள் கழித்து சிறைக் கதவுகள் திறந்துவிடப்பட்டு மீண்டும் தாக்கப்பட்டோம். அதில் 18 பேர் வரை கொல்லப்பட்டார்கள். டாக்டர் ராஜசுந்தரம் நன்றாக சிங்களம் பேசுவார். அவர் தாக்க வந்தவர்களிடம், எங்களை ஏனப்பா தாக்குகின்றீர்கள்... நமக்குள் என்ன பிரச்சினை? என்றுதான் கேட்டார். அவரது தலை பிளக்கப்பட்டு தரையில் விழுந்து இறந்தார்.






ஒரு கம்பிக்குள் அடைபட்டிருந்த நாங்கள் இதை வேடிக்கை பார்த்தோம். ஜெகன், குட்டிமணி, தங்கதுரை உட்பட முக்கியப் பிரமுகர்கள் 53பேர் அந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட பிறகு, மிச்சம் இருந்தவர்களை மட்டக்களப்பு சிறைக்கு மாற்றினார்கள். அங்கே சில மாதங்கள் இருந்தோம்.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது. பிளாட் அமைப்பு மட்டக்களப்பு சிறையை உடைத்து எங்களை விடுவித்தார்கள். நாங்கள் காட்டையும் கடலையும் கடந்து, உடுத்திய உடையோடு இந்தியாவுக்கு வந்தோம்.

தமிழகம் வந்த புதிதில் நல்ல மரியாதை இருந்தது. என்னை மீட்டவர்கள் பிளாட் அமைப்பினர் என்பதால், நான் அவர்களுடன் வேலை செய்தேன். சந்ததியாரும் சென்னையில்தான் இருந்தார். நான் தங்கியிருந்த இடத்துக்கு அடிக்கடி வந்து போவார். ஒரு கட்டத்தில் பிளாட் தலைவர் உமா மகேஸ்வரனோடு சந்ததியாரும் நானும் முரண்பட்டோம். அமைப்பிலிருந்து விலகி சுதந்திரமாக இருக்க விரும்புவதாகக் கூறி வெளியேறினேன். திடீரென்று ஒரு நாள் சந்ததியார் காணாமற் போனார். அவருக்கு என்ன நடந்தது என்று இன்றுவரை எனக்குத் தெரியாது. ஆனால், ஊகிக்க முடிந்தது?

தாயக விடுதலைக்காக எந்த அமைப்பை நம்பி இளைஞர்கள் வந்தார்களோ, அந்த அமைப்புக்களின் தலைமைகளாலேயே இளைஞர்கள் வேட்டையாடப்பட்டார்கள். இதில் அருவருப்படைந்து அன்றைக்கு ஒதுங்கியவன்தான் நான். அதன்பின்னர் எந்த ஓர் அமைப்பையும் நான் ஆதரிக்கவில்லை. அதேநேரம் சிங்களப் பேரினவாதிகளுக்கு எதிராகவும், ஈழமக்களின் விடுதலைக்காகவும் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்தேன்! Tamil Eelam freedom strugle எனும் டேவிட் உள்ளிட்ட சில நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார்.

இதோ தமிழகம் வந்து 30 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஒவ்வொரு காலகட்டத்திலும் ஓர் ஆற்றல் நீந்துவதைப் போல நீந்தித்தான் மறுகரை சேர்ந்தேன். ஆரம்பத்தில் ஆங்கில வகுப்பு எடுத்து அதில் வரும் வருவாயைக் கொண்டு வாழ்ந்தேன். ஆனால், இப்போதைய இளைய தலைமுறையுடன் எனக்கு சரிவரலை. அதுதான் தனியா வந்துட்டேன். இப்போ வெறுமை மட்டும்தான் எஞ்சியிருக்கு. இப்போது ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பொலிசிடம் பதிய வேண்டும். எங்கு தங்குகிறேன் என்ற விவரத்தை பொலிசுக்குக் கொடுக்க வேண்டும்.

90 வயதைத்தொட்டாலும், என்னால் நடக்க முடியாவிட்டாலும் நானும் ஒரு பயங்கரவாதியாகவே இங்கே பார்க்கப்படுகிறேன் எனும் டேவிட் ஐயாவின் ஒரே கவலை, தனது 1,500 நூல்களை தனக்குப் பிறகும் பத்திரப்படுத்த வேண்டும் என்பதுதான்.

ஆனந்தவிகடன்

# 2014 ஆம் ஆண்டுக்கிடையில் காணிப் பிரச்சினைக்கு தீர்வு

## காணி ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவான காணிப்பிரச்சினைகள் உள்ளன. எதிர்வரும் 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் நாம் காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைப்போம் என்று காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர்.ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் நிலவி வரும் காணிப் பிரச்சினையத் தீர்த்து வைப்பதற்கான காணிக் கச்சேரி நடமாடும் சேவை யொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே அதிகளவானகாணிப் பிரச்சினைகள் உள்ளன. இவற்றை அடுத்த 2014 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் நாங்கள் தீர்த்து வைப்போம்.

இந்த பிரதேசங்களில் யுத்தம் நிலவியதால் இந்த காணிப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. இவ்வளவு நீண்டகாலமாக உள்ளகாணிப் பிரச்சினைகளை ஓரிரு மாதங்களுக்குள் தீர்த்து வைக்கமுடியாது.

தற்போது வடமாகாணத்தில் நிலவும் காணிப் பிரச்சினைகளை நாங்கள் படிப்படியாக தீர்த்து வருகின்றோம். இனி கிழக்கு மாகாணத்தில் உள்ள காணிப் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். அதற்கான நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டையும் அடுத்த ஆண்டையும் காணி பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் ஆண்டாக நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காக கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் காணிக் கச்சேரி நடமாடும் சேவைகளை நடத்தி அங்குள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு பிரதேச செயலாளர் மட்டத்தில் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

அங்கு பிரதேச செயலாளரினால் தீர்த்து வைக்கமுடியாத பிரச்சினைகளை நாம் தீர்த்து வைப்போம்.

புதிதாக அரச காணிகளில் அத்துமீறி குடியேறுகின்றவர்கள், அரச காணிகளைப் பிடிப்பவர்கள் அவற்றிலிருந்து வெளியேற்றப்படுவார்கள். குடியிருப்பதற்கு காணியிலாதவர்கள் முறையாக விண்ணப்பித்தால் அது தொடர்பில் காணிக் கச்சேரியில் பரீசிலிக்கமுடியும்.

இங்குள்ள பழைய காணிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டும். அதன் பின்னரே புதிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும். இந்த காணிப் பிரச்சினைகளை அரசியலாக்கி மேலும் பிரச்சினைகளை விஸ்தரிக்க வேண்டாம். இதற்காக ஆர்ப்பாட்டங்களை நடத்தி இந்த பிரச்சினைகளைப் பெரிதாக்கி கொள்ள வேண்டாம்.

தமிழர்கள், சிங்களவர்கள் என்று இனம், மதம், மொழி பார்த்து வேலை செய்வதில்லை. சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு காணிச் சட்டத்திற்குட்பட்ட வகையில் இந்த காணிப் பிரச்சினைகளைத்தீர்த்துவைப்போம்.

இந்த பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புளுகுனாவ காணிப் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு இந்த பிரதேசமக்களின் ஒத்து ழைப்பு அவசியமாகும். இதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கசினோ முதலாளிகளே பலம் பொருந்தியவர்கள்

## ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தில் ஜாதிக ஹெல உறுமய அங்கம் வகித்தாலும் கசினோ முதலாளிகளே அரசாங்கத்தில் பலம் பொருந்தியவர்களாக இருக்கின்றனர் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நடைபெற்றவைபவம் ஒன்றில் கலந்து கொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தற்பொழுது சர்வதேச நிறுவனங்களின் விபச்சாரியாக மாறியுள்ளது. இன்றைய அரசாங்கம் பணம் தனது சட்டை பைக்குள் வரும் என்றால் எதனையும் செய்ய தயங்காதுள்ளது.

ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தில் இருந்த போதிலும் வெளிநாட்டு நிறுவனங்கள் கூறுவதையும் கசினோகாரர்கள் கூறுவதையுமே அது காது கொடுத்து கேட்கின்றது. அரசாங்கத்தில் கசினோ முதலாளிகளே பலம் கொண்டவர்களாகவுள்ளனர்.

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட வெலிவேரிய சம்பவம் உட்பட சகல சம்பவங்களிலும் அரசாங்கம் சர்வதேச நிறுவனங்களின் பக்கம் நின்றே செயற்பட்டது என்றார். (அ-2)

# பொலிஸ் திணைக்களம் இராணுவமயப்பட்டு விடாது

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் செயலாளராகத் தான் நியமிக்கப்பட்டமையால் பொலிஸ் திணைக்களம் இராணுவமயப்படுத்தப்படமாட்டாது என்று அமைச்சின் செயலாளர் இளைப் பாறிய மேஜர் ஜெனரல் நந்தமல்ல வராச்சி தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ செய்த வேலைகளை தான் தொடரப் போவதாகவும் தேவை ஏற்படின் கொள்கைகளை அச்சமின்றி மாற்றிக் கொள்ளபோவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மக்கள் பொலிஸாருடன் சுமுகமாகப் பழகும் வகையில் பொலிஸ் சேவை மக்களின் நட்புக்குரியதாக இருக்க வேண்டும். அப்போதுதான் பொலிஸார் தம்மைச்சுற்றி இடம்பெறும் தீய செயல்கள் தொடர்பான தகவல்களைப் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

பொலிஸாரால் ஆற்றப்படும் நல்ல விடயங்களைப் பாராட்டும் வேளையில் பிழை செய்பவர்கள் தண்டிக்கப்படவும் வேண்டும்.

பொலிஸாருக்கு வழங்கப்படும் சம்பளம் போதுமானதல்ல. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நான் முயற்சியெடுப்பேன் என்றும் செயலாளர் தெரிவித்தார். (அ-2)

# நிதியமைச்சர்கள் ஜனாதிபதியுடன் பேச்சு

இலங்கைக்கு விஜயம் செய் துள்ள தெற்காசிய நாடுகளின் நிதி யமைச்சர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப் பொன்று நடைபெற்றது. ஜனாதிபதி மாளி கையில் இந்த சந்திப்பு இடம் பெற்ற தாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தெற்காசிய நாடுகளின் நிதியமைச்சர்களின் 6 ஆவது மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவர்கள் இலங்கை சென்றுள்ளனர். இந்த சந்திப்பின் போது, இருதரப்பு விவ காரங்கள் மற்றும் பிராந்திய நாடுக ளின் முக்கிய விடயங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (எ-11)




- 1715-பிரான்சின் அரசன் பதினான்காம் லூயி 72 ஆண்டுகள் ஆட்சியின் பின்னர் இறந்தான். இவனே நீண்டகாலம் ஆட்சி புரிந்த ஐரோப்பிய அரசன்.
- 1752- விடுதலை மணி பிலடெல்பியாவை வந்தடைந்தது.
- 1894 - அமெரிக்காவில் மினசோட்டாவில் இடம்பெற்ற காட்டுத்தீயில் 400 பேர் உயிரிழந்தனர்.
- 1897-வடஅமெரிக்காவின் முதலாவது சுரங்கத் தொடரூந்து சேவை பொஸ்டனில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1902 - முதலாவது அறிவியல் புனை திரைப்படம் பிரான்சில் திரையிடப்பட்டது.
- 1914 - ரஷ்யாவின் சென் பீட்டர்ஸ்போர்க் நகரம் பெட்ரோகிராட் எனப் பெயர் மாற்றப்பட்டது.
- 1928 - அகமெட் சோகு அல்பேனியா நாட்டை முடியாட்சியாக அறிவித்துத் தன்னை அதன் மன்னராக அறிவித்தார்.
- 1951 - ஐக்கியஅமரிக்கா, அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகியன தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தத்தை (ஆன்சஸ் ஒப்பந்தம்) செய்து கொண்டன.
- 1969- அல் கடாபி, புரட்சியின் மூலம் லிபியாவின் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1979 - நாசாவின் பயனியர் 11 ஆளில்லா விண்கலம் சனிக் கோளை 21ஆயிரம் கி.மீ. தூரத்தில் அடைந்தது. இதுவே முதன் முதலில் சனியை அடைந்த விண் கலம் ஆகும்.
- 1983-பனிப்போர்: சோவியத் ஒன்றியத்தினுள் அத்துமீறி நுழைந்த கொரிய பயணிகள் விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் அதில் பயணம் செய்த 269 பேரும் உயிரிழந்தனர். இறந்தவர்களில் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர் லோரன்ஸ் மாக்டொனால்ட்டும் ஒருவர்.
- 1985 - அமெரிக்க, பிரெஞ்சு கூட்டு முயற்சியில் டைட்டானிக் கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1991 - உஸ்பெகிஸ்தான், சோவியத் ஒன்றியத்தில இருந்து வெளியேறி விடுதலையை அறிவித்தது.

### பிறப்புகள்

- 1877 - அ.வரதநஞ்சைய பிள்ளை, தமிழறிஞர் (இ. 1956)
- 1895 - செம்பை வைத்தியநாத பாகவதர், கர்நாடக இசைக் கலைஞர் (இ. 1974)
- 1925 ஜராய் கிளாபர், அமெரிக்க இயற்பியலாளர்

### இறப்பு

- 1980 - தனிநாயகம் அடிகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன ஸ்தாபகர் (பி .1913)

# அதிகாரங்களுக்காக குரல் கொடுக்கவே வடக்கு தேர்தலில் போட்டியிடுகிறேன்

## வேட்பாளர் விந்தன் தெரிவிப்பு



யாழ். மாநகர சபையில் ஊழல்களுக்கு எதிராகக் குரல்கொடுத்த நான் மாகாண சபையில் அதிகாரங்களுக்காக குரல் கொடுப்பதற்காகவே பலரின் வேண்டுகோளுக்கிணங்க போட்டியிடுகிறேன்.

இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபையின் யாழ். மாவட்ட வேட்பாளருமான கே.என். விந்தன் கனகரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களுக்கும் வேட்பாளர் விந்தனுக்குமிடையான பிரசார சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச்சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இக்கூட்டத்தில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாநகர சபைத்தேர்தலில் என்னை நீங்கள் அமோக வெற்றியடைய செய்திருந்தீர்கள். இவ் வெற்றியை தொடர்ந்து யாழ். மாநகர சபையில் இடம்பெறும் ஊழல் கள் மற்றும் முறைகேடுகள், அநீதிகளை வெளிக் கொண்டு வருவதில் நான் செயற்பட்ட விதம் கடும் சவாலான விடயமாகவே அமைந்தது.

எனினும் நான் சளைக்கவில்லை. துணிச்சலுடன் இயங்கினேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு அநீதி விளைவிக்கப்படும் போதெல்லாம் நான் சபையில் பார்த் துக் கொண்டிருக்கவில்லை. நீதிக்காகவும் நேர்மைக்காகவும் அச்சுறுத்தல்களையும் தாண்டி உழைத்தேன். இதன் விளைவாக எமது மக்களையும் அவர்களது உரிமைகளையும்பணயம் வைத்து தமது சுகபோகங்களை அனுபவிக்க முயன்றவர்கள் தலை குனிந்துள்ளார்கள்.

அவ்வாறான எனது தொடர்ச்சியான பணியின் காரணமாக இம்முறை வடமாகாண சபைத் தேர்தலில் என்னை வேட்பாளராக நிறுத்தியுள்ளீர்கள். உங்கள் ஆதரவுடன் நான் பெறப்போகும் வெற்றி தமிழ் மக்களுக்கான வெற்றி. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக எவ்விடத்திலும் குரல் கொடுப்பதற்கு நான் தயங்கியது கிடையாது.

வடக்கில் வர்த்தக சமூகத்தினரைப் பொறுத்தளவில் அவர்களுக்கு என்று பிரத்தியேக பலதரப்பட்ட நெருக்கடிகள் உள்ளன. அவற்றில் அநேகமானவை அரசியல் ரீதியான நெருக்கடிகளாகும். இந் நெருக்கடிகளுக்கு எதிராக நான் உங்களுடன் இருந்து செயற்படுவேன். மாகாண சபையினால் மேற்கொள்ள முடியாதவற்றை சபைக்கு வெளியிலிருந்தும் திட்டங்கள் வகுத்து என்னால் செயற்படுத்த முடியும்.

எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியை உறுதி செய்து எமது தமிழ் மக்களின் வெற்றியாக மாகாண சபைத் தேர்தலைப் பயன்படுத்த நீங்கள் யாவரும் முன் வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## ஜகார்த்தா மாநாட்டில் அமைச்சர் ஹக்கீம்

இந்தோனேசிய தலைநகரான ஜகார்த்தாவில் சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது தொடர்பான மாநாடொன்று நடைபெறுகிறது. இம்மாநாட்டில் 13 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர். இலங்கையின் சார்பில் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் இம்மாநாட்டில் கலந்து கொள்வதுடன் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பொப்பாரையும் அமைச்சர் ஹக்கீம் சந்தித்துள்ளார். இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்வார் தொடர்பாகவும் அமைச்சர் இங்கு வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடினார். (அ-2)

## இராணுவ அச்சுறுத்தல் குறித்து எழுத்து மூலம் முறையிடுங்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் இராணுவ அச்சுறுத்தல் இருப்பின் எழுத்துமூலம் முறைப்பாடு செய்யுமாறு வேட்பாளர்களையும் வாக்காளர்களையும் கபே அமைப்பு கோரியுள்ளது.

வடக்கில் அதிகமான இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள நிலையில் வடக்குத் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்நிலையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் கண்காணிப்பிற்கான நிலையமான கபே இயக்கம் மேற்படி அறிவித்தலை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கபேயின் தேசிய அமைப்பாளர் மனாலப் மஹீன் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் இராணுவத்தினர் பெருமளவில் நிலைகொண்டுள்ள நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் தேர்தலுக்கு முன்பான காலப்பகுதிகளில் இராணுவத்தினர் அச்சுறுத்துவதாக கூறப்படுகின்றபோதிலும் எமக்கு எழுத்து மூலமான முறைப்பாடுகள் ஒரு சிலவே கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறான இராணுவ அச்சுறுத்தல்கள் தொடர்பான சம்பவங்கள் இடம்பெறின் அது தொடர்பில் எமது யாழ். மாவட்ட காரியாலயத்திற்கும் கொழும்பு தலைமைக் காரியாலயத்திற்கும் எழுத்து மூலமான முறைப்பாடு செய்யுங்கள்.

மேலும் சிவில் நிறுவனங்களை ஒன்றிணைத்து நீதியான தேர்தல் நடைபெறுவதற்கான கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்றார். (அ-4)

## மின் இணைப்பு வேலைகளுக்காக மின்சாரம் தடைப்பட்டிருக்கும்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி–சுன்னாகம் இடையே அமைக்கப்பட்டுள்ள 132 வோல்ட் அதியுயர் அழுத்த மின்மார்க்கத்தின் இணைப்பு வேலைகளுக்காக இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், பட்டணப்பகுதி, யாழ். மாநகரசபைப்பகுதி, குருநகர், பாசையூர், காக்கைதீவு, மீனாட்சிபுரம், கொட்டடி, நாவாந்துறை, யாழ். பிரதான வீதி, பண்ணைப் பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், மாதகல், இளவாலை, சங்கானை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, ஈவினை, சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி ஆகிய பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ். பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ-2)

## நவிபிள்ளையை அழைத்து அவமதிக்கக்கூடாது

### கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு அழைத்து அவரை அவமதிப்பது தவறானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லத்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பான அறிக்கை இன்னும் நாட்டில் வெளியிடப்படவில்லை என்றும் தான் அறிந்த வரையில் அது மனிதப் படுகொலை எனவும் கூறினார்.

தேர்தல் வன்முறைகளும் தேர்தல் சட்டங்களை மீறும் சட்டவிரோத நடவடிக்கைகளும் தற்போது அதிகரித்து வருகின்றன.

சில பிரதேசங்களில் அரசாங்க அதிகாரிகளும் தேர்தல் பிரசார பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். வடமாகாணத்தில் இராணுவத்தினர் வேட்பாளர்களின் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை ஒட்டி வருகின்றனர்.

அதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரை இலங்கைக்கு அழைத்து பின் அவரை அவமதிப்பது தவறானது. நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு வருமாறு அரசாங்கம் அழைப்பு விடுத்திருந்தால் அதற்கான பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றார். (அ-2)

## தர்ஷன் என்னும் மொட்டு கருகி ஆண்டு ஐந்து

### சிவானந்தசுந்தரம் பிறேமதர்ஷன்

(யாழ். இந்துக் கல்லூரி 2007 உயிரியல் மாணவன்)



திதி– ஆவணி அபர ஏகாதசி

வையகத்தை நாடியது 05.05.1988

வையகத்தை வெறுத்தது 26.08.2008

அன்பின் உருவமாகி எம் அகத்தினுள் கலந்தவனே
இதயங்களில் ஆறாத்தீயை வைத்து
அகமதை விட்டு பஞ்ச ஆண்டுகள் ஓடியதுவோ
தேற்ற நினைத்தால் தேறுமா ஆற்ற நினைத்தால் ஆறுமா
பண்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
உன் திருவதனம் எம் கண்ணில் உன்பாச மொழிகள்
எம் செவிகளில் உன் நினைவுகள் எம் நெஞ்சில்
துடிக்கின்றதையா பாசப் பிணைப்பை யாசித்து கனவாகி
விட்டீரோ எங்கள் குடும்பத்தின் முதல் முத்தே தர்ஷனே
உன் புன்னகை முகம் காணாமல் தவிக்கின்றோம்.

நெல்லியோடை யூனியனடி
அச்சுவேலி உடுப்பிட்டி.

உன் நினைவுடன்
அம்மா, அப்பா, தம்பி.

(3823)

## சிகிச்சை பலனின்றி முதியவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வீதி விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த முதியவரை மோதிய வாகனம் பொலிஸார் கண்ணில் அகப்படாமல் தப்பிச் சென்றுள்ளது.

இவ் விபத்தில் இணுவில் மேற்கு செட்டி லேனைச் சேர்ந்தவரும் இரு பிள்ளைகளின் தந்தையுமான கணபதி கிருஷ்ணன் (வயது 71) என்ற முதியவரே உயிரிழந்தவராவர்.

இம் முதியவர் பாடசாலை ஒன்றில் இரவு நேர காவலாளியாக பணியாற்றி வந்தார். அதன்படி அண்மையில் இரவு 9 மணியளவில் பாடசாலைக்கு துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருக்கும் போதே வாகனம் அவரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த வயோதிபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் இரு மணித்தியாலங்களின் பின்னர் உயிரிழந்துள்ளார். (அ-4)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்

# கல்மடுநகர் கிராமத்தை கண்கொண்டு பாரீர்!

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவில் உள்ள கல்மடுநகர் கிராமத்தவருக்கு அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தி கொடுக்கப்படாமையால் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பதற்கு தினம் தினம் ஏங்குகின்ற நிலை தொடர்ந்தவண்ணமுள்ளது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ரங்கன்குடியிருப்பு, கல்மடு, சம்புக்குளம், நாவல்நகர் ஆகிய இடங்களில் 800 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர். இவர்களுக்கு வீட்டுத் திட்டம் ஒன்றைத் தவிர வேறு எந்த உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

இங்குள்ள பிரதான வீதிகள் மற்றும் உள்வீதிகள் எவையும் புனரமைக்கூப்படவில்லை.

மேலும் மின்சாரமும் வழங்கப்படவில்லை. இதன்காரணமாக மின்சாரம் மூலம் செயற்படுத்தப்படும் வேலைகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. கல்வி கற்கும் மாணவர்கள் குப்பி விளக்குகளின் உதவியுடனேயே கல்விச் செயற்பாடுகளை சிரமப்பட்டு நிறைவேற்றும் நிலையில் உள்ளனர்.

வாழ்வாதார உதவிகள் குறிப்பாக வாழ்வாதார தொழிலுக்கான உபகரணங்கள் எவையும் இதுவரை வழங்கப்படவில்லை.

இங்கு விவசாயக் குடும்பங்கள் அதிகளவில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தமது உற்பத்திப் பொருட்ளை சந்தைப்படுத்த சந்தை வசதி இன்மையால் வட்டக்கச்சி சந்தைக்கே பொருட்களை விற்பனைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

இக் கிராமத்தில் சந்தைக்கென காணி ஒன்று உள்ளபோதிலும் அக் காணிக்குள் சந்தைக்கென கட்டடம் எதுவும் இல்லை.

இப்பகுதி மக்கள் கடந்த வருடம் சந்தைக் கட்டடம் அமைத்துத் தரும்படி உரிய தரப்பினரிடம் கோரிக்கை விடுத்தும் இதுதொடர்பில் இதுவரை எந்தவித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இங்கு அரச மூலிகை உற்பத்தி பண்ணை ஒன்று உள்ளது. இது மீள்குடியேற்றத்தின் பின்னர் இயங்காமையால் இங்கு வாழும் பலர் வேலை வாய்ப்பின்றியுள்ளனர்.

எனவே, தமது நிலையை உரியவர்கள் கவனத்தில் கொண்டு தமக்கு இவ்விடயங்களில் உதவ முன்வருவார்களா? என இப்பகுதி மக்கள் காத்திருக்கின்றனர்.

(ம-263)






பூநகரி பகுதியில் வரட்சியின் கொடுமையால் சகல குளங்களும் வற்றிபோயுள்ள நிலையில் அப்பகுதி கால்நடைகள் நீருக்கென அலைந்து திரிவதையும் வற்றிய குளத்தின் சேற்று நீரை அருந்துவதையும் படத்தில் காணலாம்.

(படம்:- பூநகரிச் செய்தியாளர்)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் புனரமைப்பு வேலைத் திட்டங்கள்

(மல்லாவி)

பன்முகப்படுத்தப்பட்ட நிதியைப் பயன்படுத்தி மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட பாண்டியன்குளம் பொதுச்சந்தை, மலசலகூடம், கரும்புள்ளியான் முன்பள்ளி வேலி அமைத்தல், நட்டாங்கண்டல் முத்துமாரி அம்மன் ஆலய மலசலகூடம் என்பன புனரமைக்கப்படவுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.தனிநாயகம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் முயற்சியில் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு பிரதேச சபையின் உறுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக மேற்குறித்த வேலைத்திட்டங்களுக்கு நிதி கிடைக்கப் பெற்றதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் என்பவரால் செல்வபுரம் கலைமகள் சனசமூக நிலையத்திற்கு தளபாட உபகரண கொள்வனவிற்காக ஒரு இலட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் வழங்கப்பட்டு பொருட்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-15)

# வவுனியாவில் வசதிகளை கொண்ட முப்பது கட்டடங்கள் அமைப்பு

(பூந்தோட்டம்)

சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக அனைவரும் இலகுவில் அணுகும் வசதி கொண்ட கட்டடங்களை அமைத்தல் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியாவில் 30 கட்டடங்கள் வடிவமைப்பதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன என மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.


இதில் வவுனியா நகரம், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வெண்கலச் செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகங்களும் வவுனியா மாவட்ட செயலகம், வவுனியா மாவட்ட வைத்தியசாலை, பூவரசங்குளம், செட்டிகுளம், நெடுங்கேணி, மாமடு ஆகிய வைத்தியசாலைகளும் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகியனவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் வவுனியா பிரதான பஸ் நிலையம், பிரதான புகையிரத நிலையம், பிரதான தபால் நிலையம், மாவட்ட நீதிமன்றம், பொதுச் சந்தை, பஸ் நிலையம், சந்தை, புதிய சந்தை ஆகியவற்றின் பொது மலசலகூடங்கள், வைரவபுளியங்குளம் மாவட்ட சமூக சேவை அலுவலகம், வவுனியா, ஓமந்தை, புளியங்குளம், நெடுங்கேணி, செட்டிகுளம், பூவரசங்குளம் ஆகிய இடங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள், நகர சபையின் பிரதான கலையரங்கம், நகரசபையின் பழைய கலையரங்கம் ஆகிய கட்டடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

விசேட தேவையுடையோரும் தமது தேவைகளை தாமாகச் சென்று செயற்படுத்தக்கூடிய வகையில் இக்கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-266)

# இளைஞனின் சடலம் மீட்பு



வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தில் கத்திக்குத்து காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் கத்திக்குத்து காயங்களுடன் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரின் சடலம் காணப்பட்டதை அவதானித்த ஊர் மக்கள், பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சடலத்திற்கு அருகில் வெற்று மதுபான போத்தல் ஒன்றும் மதுபான கப் மற்றும் தீப்பெட்டி என்பனவும் இறந்தவரின் மோட்டார் சைக்கிளும் காணப்பட்டதுடன் இறந்தவர் அணிந்திருந்த சங்கிலி, கைத்தொலைபேசி என்பவற்றை காணவில்லை எனவும் ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுந்தரபுரத்தில் வசித்து வந்த சாந்தகுமார் சதீஸ்வரன் (வயது 31) ஆவார். இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-250-266)

# வடமாகாண தமிழ் இலக்கிய பெருவிழா

(முல்லைத்தீவு)

வடமாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் வடமாகாண தமிழ் இலக்கியப் பெருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் மு/வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்படி இன்றைய நாள் நிகழ்வுகள் கல்லூரியில் மிஸ்கின் புலவர் அரங்கில் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

முல்லைத்தீவு அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, கௌரவ விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இத்தமிழ் இலக்கிய பெருவிழாவில் இரண்டாம்நாள் நிகழ்வுகள் கல்லூரியின் அரியான் பொய்கை செல்லத்துரை அரங்கில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இரண்டாம் நாள் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ஆர்.விஜயலட்சுமி, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவ் இருநாள் விழாவில் கிராமிய நடனம், வேப்பிலை நடனம், கரகம், பரத நாட்டியம் போன்ற வேறு பல நடன நிகழ்வுகளும் ஒயிலாட்டம், நாட்டுக்கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதுடன் முதல் நாளான இன்றைய நிகழ்வுகளில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினரின் வள்ளி திருமணம், இசை நாடகம் என்பன இடம்பெறவுள்ளன. (ம-5)

# கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்-01.09.2013



### அருளாசிச் செய்தி

கட்டப்பிராய் பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாளுக்கு புதிதாக இராஜகோபுரம் அமைக்கப்பட்டதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வகையில் ஆலயம் சாஸ்திர விதிக்கமைய பல கட்டுமான படிவங்களை கொண்டுள்ளது. இது கோபுர வாசல் முதல் மூலஸ்தானம் வரை மனிதனுடைய உடம்பிலுள்ள ஆதாரங்களை எடுத்துக் காட்டுகின்றன. ஆலயத்தின் பூரண அடையாளமான இராஜகோபுரம் இவ்வாலயத்தில் அமைந்திருப்பது நிறைவை எடுத்துக் காட்டுகின்றது.

இச்சிறப்பு இவ் ஆலயத்தில் அமைந்திருப்பது ஊருக்கும் மக்களுக்கும் பெருமையை தருவதாகும். இக் கும்பாபிஷேகத்தில் அனைவரும் தரிசித்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக!

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், நல்லை ஆதீனம் நல்லூர், யாழ்ப்பாணம்.**


### கும்பாபிஷேக பிரதம குருவின் ஆசிச் செய்தி




கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் பதியில் பஞ்சதள இராஜ கோபுரமும் வலம், இடமாக மணிக்கோபுரத்துடன் அருள் ஆட்சி புரிகின்ற அகிலநாயகி ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். எல்லாவற்றுக்கும் நாயகியாக விளங்கும் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கட்டப்பிராய் எனும் பிரதேசத்தில் வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் பொருட்டு எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

எல்லோரும் எல்லாம் கிடைக்க இப் புண்ணிய காரியத்தை செய்யும் அனைவருக்கும் இறைவனுடைய அன்பும் ஆசியும் கிடைப்பதாக! அனைவரும் கும்பாபிஷேகத்தை வழிபாடு செய்து இம்மண் ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

**ஆலய மஹா கும்பாபிஷேக குரு**
**"வேதாமவிதவசாகர"**
**சிவஸ்ரீ ரவீந்திர கேசவகுருக்கள்.**





### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம் இன்பமே வேண்டி நிற்போம் யாவுமவள் தருவாள்

ஆதிபராசக்தி அன்னை முத்துமாரிக்கு இன்று பஞ்சதீள இராஜகோபுர கும்பாபிஷேகப் பெருவிழா. கோபுரதரசினம் கோடி புண்ணியம் என்பார்கள். அப்பெரும் பாக்கியத்தை இவ்வூர்வாழ் மக்கள் பெறுவதற்கு அம்பாள் அருள்பாலித்து நிற்கின்றார்.

அம்பாளுக்கு ஓர் இராஜகோபுரம் அமைய வேண்டும் என்ற நீண்டகாலக் கனவு இன்று தாயின் அனுக்கிரகத்தால் நனவாகியுள்ளது. மிகக் குறுகிய காலத்திலே வசிக்கின்ற அம்பாள் அடியார்களது பெரும் உதவிகளுடன் இராஜ கோபுரப் பணி இனிதே நிறைவேறியுள்ளது.

அடியார்களின் விடாமுயற்சியும் இராஜகோபுர ஸ்தபதி மற்றும் அவரின் பணியாளர்களின் அரும்பெரும் முயற்சியினாலும் வானளாவி கம்பீரமாகக் காட்சிதரும் இராஜகோபுரத்துக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று மகா கும்பாபிஷேகம் பெருவிழா கைகூடியுள்ளது.

அனைத்து அடியவர்களும் துன்ப துயரங்கள் நீங்கி நிறைவாக வாழ வழி சமைப்பதற்கும் நிலைப்பதற்கும் எல்லாம் வல்ல அன்னையின் அருட்கடாட்சத்தை வேண்டி பிரார்த்திக் கின்றேன்.

**க.நிசாகரன், தலைவர், பரிபாலனசபை.**

### ஆசிச்செய்தி



கட்டப்பிராய் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான அதி சுந்தர பஞ்சதள இராஜகோபுர சஹித அஷ்டபந்தன சமர்ப்பண புனராவர்த்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இனிதே சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து குருதேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம். அம்பிகை அடியவர்கள் யாவரும் ஆசார சீலர்களாக வருகை தந்து கும்பாபிஷேக நிகழ்வில் பங்கு பற்றி அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யுமாறு வேண்டி நிற்கின்றோம்.

**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்**

இறைபணியில் ஜாக்ரத சைதன்யா, வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன் , யாழ்ப்பாணம். 021 222 3447

### ஆன்மீக நெறியில் அறப்பணி வளர்க



கடவுள் பக்தி, கலை, கல்வி ஆர்வமும் மிக்க மக்கள் வாழும் சிவபூமி கட்டப்பிராய். இத்திருவூரில் பேசும் தெய்வமாக அருள் பாலித்துக் கொண் டிருக்கும். அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கும் இருபுறமும் மணிக் கோபுரத்துடன் பஞ்சதள இராஜகோபுரத்துக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் இன்று (01.09.2013) மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது உலகிலுள்ள அம்பிகை அடியார்களுக்கு மன மகிழ்ச்சியை தருகின்றது.

கலை அம்சம் மிளிர்கின்ற இவ் இராஜகோபுரம் அனைத்து அடியவர்களின் பெரும் உதவியுடனும் ஸ்தபதி தில்லைநாதன் சந்திரன் மற்றும் அவரது பணியாளர்களின் பெருமுயற்சியினாலும் வானளாவ காட்சி தருகின்றது.

இக் கும்பாபிஷேக நன்னாளில் உலகெங்கும் வாழும் அம்பிகை அடியார்களுக்கு இறை அனுக்கிரகம் கிடைக்க எல்லாம் வல்ல முத்துமாரி அம்பாளை பிரார்த்திக்கின்றேன்.

**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**

தி.ரவீந்திரநாதன் (காப்பாளர்), முன்னாள் தலைவர், ஆலய பரிபாலன சபை. ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்.

### வாழ்த்துரை



சிவ மணம் கமழும் கட்டப்பிராய் கிராம மக்களின் குல தெய்வமாக விளங்கும் முத்துமாரி அம்பாளுக்கு அடியார்கள் இராஜகோபுரத்தையும் மகா கும்பாபிஷேகத்தையும் சிறப்பாக நடத்துகின்றார்கள். இந்தக் கிராமம் முழுவதும் அன்னை பராசக்தியின் அருளாட்சி நடைபெறுகின்றது.

தாய்த் தெய்வமாகவும் தயைப் பிரகாஜினியாகவும் இருக்கும் அம்பாள் தன்னை நாடி வரும் அடியார்களின் துன்ப துயரங்கள் அனைத்தையும் நீக்குகின்றாள். அவர்களின் கண்ணீரைத் துடைத்துக் கவலையைப் போக்குகின்றாள்.

அம்பாளுக்குத் தொண்டு செய்த அடியார்கள் அனைவரும் தாய் நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு பெற்றுச் சிறப்பாக வாழ்கின்றார்கள். இவர்கள் எங்கிருந்தாலும் அம்பாளைக் கணப்பொழுதேனும் மறப்பதில்லை.

கும்பாபிஷேகத்துடன் அம்பாளின் அருள் வீச்சு அதிகரிக்கும். அம்பாளைத் திரிகரண சுத்தியுடன் வணங்கும் அடியார்கள் நோயின்மை , கல்வி, தனம் , தான்யம், அழகு, புகழ், பெருமை, அறிவு, சந்தானம், வலிமை, துணிவு, வாழ்நாள் வெற்றி ஆகிய சகல செல்வங்களும் பெற்றுச் சீரோடும் சிறப்போடும் வாழ்வார்கள். அம்பாளின் அருள் வீச்சு அடியார்கள் அனைவரையும் பாதுகாக்கும்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்**

### அம்மன் அருள்



யாழ். மாநகரின் கட்டப்பிராய் பதியினிலே வேண்டுவோர் நெஞ்சங்களிற்கெல்லாம் பேசும் தெய்வம் அன்னை ஸ்ரீ முத்துமாரியாக விளங்கும் அம்பிகைக்கு அதி சுந்தர பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் காணும் பாக்கியம் இன்று எமது சமூக மக்களுக்கு கிடைத்துள்ளது. இவ்வளப்பரிய பஞ்சதள இராஜகோபுரத்தை நிர்மாணிக்க முன்வந்த பக்த ஜனங்கள், கொடை வள்ளல்கள், அபிமானிகள், எல்லோரும் ஆண்டவன் அன்பிற்கும் அருளுக்கும் கட்டுப்பட்டவர்கள். தூவலிங்கம் என்று சொல்லப்படும் கோபுர தரிசனத்தைப் பெற கோடி புண்ணியம் பயக்கும் என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய இப்புண்ணிய கைங்கரியத்தை செயற்படுத்திய அன்பர்களுக்கெல்லாம் நித்திய வாழ்வும், நித்திய சுகமும் கிடைக்கும் என்று வாழ்த்தி வணங்குகின்றேன்.

**வி.பாஸ்கரன்,**
**செயலாளர்,**
**ஆலய பரிபாலன சபை.**

**மலராக்கம்**
**தில்லைநாதன் ரவீந்திரநாதன்**
**(அதிபர் தரம் )**
**யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்.**

DHL EXPRESS வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
220ற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது.
11kg மேற்பட்ட பொதிகளுக்கு கட்டணச் சலுகை, கடலுணவு, மருந்து பொருட்கள், எண்ணை, பழவகைகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
உங்கள் இல்லங்களில் வந்து பொருட்களை பொறுப்பெடுத்து வெளிநாடுகளில் உரிய முகவரியில் ஒப்படைக்கும் சேவை.
திருமுருகன் கொம் நெற்
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
TCN Express

வெளிநாடுகளில் இருந்து மிக விரைவாக பணத்தினைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
MMBL Money Master
46, Adiyapathum Veethy, Thirunalvely.
சகல நாடுகளுக்குமான விமானப் பயணச்சீட்டு, அதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
கனடா, லண்டன், இந்தியா ஆகியவற்றுக்கான Online Visa விண்ணப்ப சேவையினைப் பெற்றுக்கொள்

அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பாடசாலை
கிருபா லேணர்ஸ்
தலைமைக் காரியாலயம் 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:021 222 4353
கிளை சுன்னாகம் கே.கே.எஸ்.வீதி, மதவடி முன்பா T.P: 0212242022 0714546956

Prepared Under Hygienic Methid Specially
For Physicians and Domestic purposes
IMPROVED FORMULA PURITY GUARANTEED
எங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கும் காரணம்
V.S.P SPECIAL LUNCH OIL
சுத்தமான V.S.P. நல்லெண்ணை. R/No:11505
Special V.S.P. Gingelly Oil
தொ.பே.இல.0212224135/9165

எஸ்.வி.முருகேசு
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
S.v.Murugesu
154, Hospital Road Jaffna.
T.P:- 021 222 8899, 021 4925831

# காணாமற் போனோர் பற்றி ஆராய விசேட தூதுக்குழுவை அனுப்புவேன்

## உறவுகளிடம் நவி அம்மையார் உறுதிமொழி

(கொழும்பு)

**இலங்கையில் காணாமற் போனோர் தொடர்பில் ஆராய்வதற்காக விரைவில் தூதுக்குழுவொன்றை அனுப்புவதாக ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவிபிள்ளை உறுதியளித்துள்ளதாக காணாமற் போனோரை தேடியறியும் குழுவினர் கூறுகின்றனர்.**

தமது தூதுக்குழுவுக்கு அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் தான் கேட்டுக் கொண்டதாக நவிபிள்ளை கூறியதாகவும் காணாமற் போனோரை தேடியறியும் குழுவின் செயலாளர் சுந்தரம் மகேந்திரன் கூறினார்.

இலங்கையில் கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்களின் நூற்றுக்கணக்கான உறவினர்களையும் ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையர் கொழும் பில் நேற்றுமுன்தினம் மாலை சந்தித்தார்.

இதன்போது தமது உறவுகள் திரும்பிவர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் காணாமற் போனவர்களின் உறவினர்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஜனாதிபதியை சந்தித்தபோது, இலங்கையில் பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்படும் சம்பவங்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டுமென்று தான் கேட்டுக் கொண்டதாக நவிபிள்ளை காணாமற் போனவர்களின் உறவினர்களிடம் கூறியுள்ளார்.

இதேவேளை, நவிபிள்ளையுடனான சந்திப்பின் முடிவில் காணாமற் போனவர்களின் உறவினர்கள் கொழும்பில் சுதந்திர சதுக்க வளாகத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி கவனயீர்ப்பு பேரணியொன்றையும் நடத்தியிருந்தார்கள்.

இதற்கிடையே நேற்றுமுன்தினம் பகல், யுத்தத்தில் உயிரிழந்த மற்றும் காணாமற் போன இராணுவத்தினரின் உறவினர்களின் சங்கத்தினரும் கொழும்பு சுதந்திர சதுக்கத்திலிருந்து பேரணியாகச் சென்று ஐ.நா. தலைமையகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பிலும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர் விசாரணை நடத்த வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வெளிநாடுகளில் வாழும் விடுதலைப் புலித் தலைவர்களிடம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்றும் யுத்தத்தில் உயிரிழந்த மற்றும் காணாமற் போன இராணுவத்தினரின் உறவினர்களின் சங்கத்தினர் கேட்டுக்கொண்டனர்.

போர்க்காலத்தில் காணாமற் போனோரைக் கண்டுபிடிப்பதற்காக இலங்கை அரசு நியமித்திருக்கும் ஆணையம் குறித்தும் நவி அம்மையார் பாராட்டியதாக ஜனாதிபதி அலுவலக செய்தி குறிப்பு தெரிவிக்கின்றது. (அ-2)

# மட்டக்குளி பகுதியில் முப்பது வீடுகள் தீக்கிரை

மட்டக்குளி பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 30 பலகை வீடுகள் எரிந்து நாசமாகியள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

மட்டக்குளி,கெமுனுபுர பகுதியில் சேரிப்புறத்திலுள்ள வீடுகளே இவ்வாறு எரிந்து நாசமாகியுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

வீடொன்றில் இருந்து குப்பி விளக்கொன்று கீழே விழுந்து தீ பரவியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இத் தீயை தீயணைப்பு படையினர் சுமார் ஒரு மணிநேரத்திற்கு பின்னர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் அப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் உறவினர் வீடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முகத்துவாரம் பொலிஸார் இத் தீவிபத்துச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்தனர். (அ-2)

# கைபேசி கடத்தியவர்கள் சுங்கப் பிரிவினரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக கையடக்கத் தொலைபேசி மற்றும் அதன் பாகங்களை நாட்டுக்குள் கொண்டு வந்த நால்வர், கட்டுநாயக்க விமானநிலையத்தில் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

அப்பொருட்களின் பெறுமதி 30 இலட்சம் ரூபாவென சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட் டார்.

இவ்வாறான பொருட்களை நாட்டிற்கு கொண்டுவருவதாயின் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவிடம் உரியவர்கள் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

இந்தக் குழுவினர் நீண்டகாலமாக இவ்வாறான நடவடிக்கைக ளில் ஈடுபட்டிருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக சுங்கப் பிரிவு தெரிவித்தது.

தற்போது இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர். (அ-2)

# சதாசகாய அன்னை வருடாந்த திருவிழா

துன்னாலை தூய சதாசகாய அன்னை ஆலயவருடாந்ததிருவிழா இன்றுஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆயத்த வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து எதிர்வரும் 7-ம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழா திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் வழிபாடும் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழா திருப்பலியும்ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து அன்னையின் திருச் சொருப பவனியும் இடம் பெறவுள்ளது. (அ-5)



உண்மையான நண்பன் உங்களுக்காக எப்போதும் அங்கே காத்திருப்பான்...



உங்கள் NRFC/RFC கணக்குகள் பின்வரும் இலவச சலுகைகளைத் தருகின்றனவா?

சத்திரசிகிச்சைகளுக்கு ரூ.100,000/-* வரை

திருமணத்தின் போது ரூ. 40,000/-* வரை

பிரசவத்தின் போது ரூ. 35,000/-* வரை

விடுமுறைப் பொதி நட்சத்திர அந்தஸ்துள்ள ஹோட்டல்கள்

ஆயுள் காப்புறுதி ரூ 1 மில்லியன் வரை

கண்புரை (Cataract) சத்திரசிகிச்சை ரூ. 25,000/-* வரை

மீளச் செலுத்தப்படும் SLBFE கட்டணம் ரூ.10,000/-* வரை

GRACE

* நிபந்தனைக்குட்பட்டது.

செலான் NRFC/RFC திலின சயுர

25 ஆண்டுகால அர்ப்பண சேவை 1988 - 2013

இதுவொரு சீட்டிழுப்பல்ல. கணக்கு மீதிக்கேற்ப சலுகைகள் வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கிக்கு விஜயம் செய்யுங்கள் அல்லது, 011 200 88 88 மூலம் தொடர்பு கொள்ளுங்கள்

செலான் டவர்ஸ், இல.90, காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி: +94 11 2456789, +94 11 2456000 தொலைநகல்: +94 11 2456456 மின்னஞ்சல் : info@seylan.lk வலை: www.eseylan.com Brand Finance Rating "A" Fitch Rating:'A-(lka)' கம்பனிப் பதிவிலக்கம் PQ 9 இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

www.eseylan.com

LIKE US ON facebook

www.facebook.com/SeylanBank

செலான் வங்கி

அன்புடன் அரவணைக்கும் வங்கி

## சுவிஸ் வீரரின் சாதனை

சுவிஸில் உலக சாதனைக்காக 4,060 மீற்றர் உயரத்திலிருந்து பாட்ரிக் கெர்பர் சாதனை படைத்துள்ளார்.

சுவிற்சர்லாந்தில் சூரிச் பகுதியை சேர்ந்தவர் பெட்ரிக் கெர்பர். 32 வயதான இவர் சிறுவயதிலேயே 820 மீற்றர் உயரத்திலிருந்து 2 நிமிடங்கள் 3 வினாடிகளிலிருந்து பறந்து சாதனை படைத்துள்ளார்.

தற்போது ஆல்ப்ஸ் மலையிலிருந்து 4,060 மீற்றர் உயரத்திலிருந்து பறந்துள்ளார்.

இது குறித்து கெர்பர் கூறுகையில். இது என்னுடைய நீண்ட நாள் ஆசையாகும். மேலும் நான் பறப்பதற்கு முன்னதாக பனி மற்றும் காற்று நிலை குறித்து அறிந்து கொண்டேன்.

அதன் பின்பு பறக்கத் தொடங்கினேன். நான் கீழே இறங்கிய பின்பு என்னுடைய பாரசூட்டானது விரிந்து கொண்டது. இந்த சாதனையை எப்படி செய்தேன் என்பதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை என்று கூறியுள்ளார்.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு இந்த ஆல்ப்ஸ் மலையில் சாதனையில் ஈடுபட்ட 30 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

மேலும், சமீபத்தில் சண்டைப் பயிற்சியாளரான மார்க் சட்டன் சாகசத்தில் ஈடுபடும்போது மலைப்பகுதியில் மோதி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1717 FOLLOW US www.mobitel.lk

சிறப்புமிகு ரமழான் மாதத்தில் சிறப்புமிகு IDD கட்டணங்கள்

குறித்த கட்டணங்கள் IDD Buddy அழைப்புகளுக்கானவை. விஷேட அழைப்பு முறை கொண்டது.

டயல் 100 <தேசக் குறியீடு> <அழைப்பைப் பெறுபவர் இல.>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பஹ்ரெய்ன் | ரூ. | 4.00 | ஓமான் | ரூ. | 12.00 |
| சைப்ரஸ் | ரூ. | 1.00 | கட்டார் | ரூ. | 15.00 |
| யோர்தான் | ரூ. | 9.00 | சவூதி அரேபியா | ரூ. | 8.00 |
| குவைட் | ரூ. | 6.00 | | | |
| லெபனான் | ரூ. | 9.00 | ஐக். அரபு இராஜ்ஜியம் | ரூ. | 12.00 |

2013 ஜூலை 1 முதல் ஓகஸ்ட் 31 வரை செல்லுபடியாகும் | இக் கட்டணங்கள் நிலையான இணைப்புகளுக்கானவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது. சகல கட்டணங்களும் அரசாங்க வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டவை.

TRIAD 28466

20 ஆண்டுகள்

Sri Lanka Telecom Mobitel

உங்களுடனே என்றும்.

அரசன் ஒருவரை கனவானாக்கிவிடலாம்.
ஆனால் அவரைக் குணவானாக்க இயலாது.
-நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் தலைவர்கள் நிதானமாக நடந்துகொள்ள வேண்டும்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்தமை சாதாரணமான விடயம் அன்று.

அவரின் விஜயம் இலங்கை அரசுக்குப் பல வழிகளிலும் அழுத்தத்தைக் கொடுக்கும் என்பது வெள்ளிடைமலை.

இலங்கையில் நிலவும் மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல்போனோர் தொடர்பில் நவநீதம்பிள்ளையின் முடிவுகள் கடுமையானதாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை.

இதனிடையே ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையைத் திருமணம் செய்யத் தாம் தயாராக இருப்பதாக அமைச்சர் மேர்வின் சில்வா கூறியமையானது இலங்கையில் தனி மனித உரிமைகள் எங்ஙனம் உள்ளது என்பதை அறிவதற்குப் போதுமானதாயிற்று.

ஆக, வழமையில் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டுக்கு பிரமுகர்களை வளைத்துப்போடும் அரச இராஜதந்திரம், நவநீதம்பிள்ளையின் வருகையில் பிசுபிசுத்துப் போயிற்று.

காலம் பிழைத்தால் கறுத்தார் என்ன செய்ய முடியும் என்பதைப் போல இலங்கை அரசுக்குக் காலப்பிழை நெருங்கிவருகிறது என்று கூறலாம்.

இதற்கு மேர்வின் சில்வாவின் வார்த்தைகளே ஆதாரமானவை.

காலப்பிழைக்கு அரசு காவடி எடுக்க, அமைச்சர் மேர்வின் சில்வாவோ காவடியாட்டத்துக்கு சங்குநாதம் இசைப்பதாக நினைத்து காவடிக்காரனை வேலிக்குள் தள்ளி விழுத்திவிட்டார்.

இலங்கையில் சர்வ சாதாரணமாக நடந்து கொள்ளும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர் அழிவுகள் தொடர்பில் ஐ.நாவுக்கு பதில் அளிப்பதே போதும் என்றாகிய நிலையில், சும்மா கிடந்த சங்கை எடுத்து ஊதி அரசுக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவின் செயலுக்காக மன்னிப்புக் கேட்பது, மனம் வருந்துவது எனப் பல வழிகளிலும் பிராயச்சித்த பூசைகள் நடந்த வண்ணம் உள்ளன.

ஆக, இப்போது இலங்கை அரசுக்கு காலம் பகை என்பது தெளிவு. எனவே இந்த நேரத்தில் எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் பொறுப்புடனும் நிதானத்துடனும் நடந்துகொள்ள வேண்டும்.

நவநீதம்பிள்ளை எடுக்கப்போகின்ற முடிவுகள் நிச்சயம் கடுமையானவையாக இருக்கும். இந்த நேரத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் இசக்குப்பிசக்காக, நடந்து கொண்டால் எல்லாம் கெட்டுவிடும். எனவே அற்ப சொற்ப சலுகைகளுக்காக இசைந்து – மசிந்து போகாமல் ஐ.நா. சபை எடுக்கின்ற முடிவுகளை, நடவடிக்கைகளை பார்த்துக்கொள்வோம்.

இதைவிடுத்து வடக்கு மாகாணசபையை நாம் கைப்பற்றினால் காணாமல்போனோர் அனைவரையும் மீட்போம் என்று உணர்வு தளும்பப் பேசுவதையெல்லாம் தவிர்த்துக் கொள்வது உத்தமமானது.

உசுப்பேத்தி உசுப்பேத்தி ரணகளமாக்கும் வேலைகளைச் செய்யாமல் தமிழர்களின் தற்போதைய யதார்த்த நிலைமையைத் தெளிவாகக் கூறுவது இப்போதைக்குப் போதுமானதாகும்.

இதற்கப்பால் எந்த விடயத்திலும் தெளிவாக – வெளிப்படையாக செயற்படுவதும் தமிழ் அரசியல் தலைவர்களின் தார்மிகக் கடமை.

உள்ளொன்றும் புறமொன்றுமாக நடந்து கொள்வதன் விளைவுகள் தமிழ் மக்களையே பாதிக்கும் என்பதால் மேற்போந்த விடயத்தில் அதீத கவனம் செலுத்துவதும் கட்டாயமானதாகும்.

## சிறுவர்களுக்கான மாபெரும் போட்டி

### இந்துவாக வாழ்வோம்

நல்லைக் கந்தப்பெருமான் உற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வழங்கும் கேள்வி பதில்கள்

31.08.2013க்கான வினாவும் விடையும்:-

வினா:- இந்துவாக வாழ்வோம் என்பதன் அர்த்தம் என்ன?

விடை: இந்து சமயத்தின் (சனாதன தர்மத்தில்) அடிப்படைத் தத்துவங்களைப்புரிந்துகொண்டு எல்லா உயிர்கள் மீதும் அன்பு செலுத்தி தர்மப்படி வாழுதல்.

மேலே தரப்பட்டுள்ள கேள்வி விடைகளை ஒரு அப்பியாசப் புத்தகத்தில் ஒட்டி அல்லது எழுதி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி (01.09.2013) நண்பகல் 12 மணிமுதல் பிற்பகல் 4 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் கையளிக்கும் போது துணுக்குகளில் வரும் கேள்விகளுக்கு சரியான பதிலைச் சொல்லும் அனைவருக்கும் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். 18 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்

இல.9, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர்.

## கழிவு ஒயில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியி ன் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் அங்கஜன் இராமநாதனின் சுவரொட்டிகள் மீது கழிவொயில் ஊற்றித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கட்டுடைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது. (செ-6)

## அங்க சேட்டைக்கு பூசகர் தண்டனை


(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் பெண் ஒருவரிடம் அங்க சேட்டை புரிந்தவரை அங்கு நின்ற பூசகர் ஒருவர் திடீர் அடி கொடுத்து தண்டித்துள்ளார்.

நேற்றுக்காலை 8.00 மணியளவில் நல்லூர்க் கந்தனின் ஆறுமுக சாமி வழிபாட்டிடத்தில் பூசை வழிபாட்டுக்காக வந்திருந்த பெண் மீது அங்க சேட்டை புரிந்தவரையே பூசகர் தண்டித்துள்ளார். (செ-1)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எல்லாரும் வாழியடா



அகர முதல எழுத்தெல்லாந்– தம்பி
அதுபோல் ஆதி யுலகுக்கடா
பகரில் அவனோ ஒருவனடா– தம்பி
பலபல வாகச் சொல்வாரடா

கற்றதனாற் பயன் இல்லையடா– தம்பி
கழல் அடியினை கண்டிடடா
வெற்றிப் பேச்செல்லாம் விட்டிடடா– தம்பி
விதியை மதியால் வென்றிடடா

## இரு நூல்களின் வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை இளம் பொருளியலாளர் மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை முன்னாள் தலைவர் நல்லதம்பி பேரின்பநாதன் எழுதிய இருநூல்களின் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற வுள்ளது.

மேற்படி நிகழ்வில் இலங்கையின் பொருளாதார வரலாறு 1800-1948 (விவசாயத்துறை), இலங்கையின் பொருளாதார வரலாறு - கட்டுரைத் தொகுப்பு ஆகிய நூல்களே வெளியிடப்படவுள்ளன.

பலகலைக்கழக பொருளியல்துறை பதில் தலைவர் எஸ். எஸ். உதயகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

நூலுக்கான வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஞா. ஞானக்குமார், விஞ்ஞானபீட முன்னாள்பீடாதிபதி பேராசிரியர் க. கந்தசாமி, யாழ். பல்கலைக்கழகவவுனியா வளாக முதல்வர் க. அருள்வேல் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன், மதிப்பீட்டுரையை யாழ். பல் கலைக்கழக வவுனியா வளாக முன்னாள் முதல்வர் பேராசிரியர் ஆர். நந்தகுமாரன் ஆகியோர் வழங்கவிருக்கின்றனர்.

நூல்களின் முதற்பிரதிகளை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட முன்னாள் பீடாதி பதீ பேராசிரியர் க. தேவராசா, யாழ். பல் கலைக்கழக வரலாற்றுத் தலைவர் பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் ஆகியோர் பெற்றுக் கொள்ளவுள்ளனர். (அ-5)

## மனிதநேய உண்மைகளை எம்மில் வளர்த்தெடுப்போம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

இன்று தமக்குத்தரப்படும் வேதாகமப் பகுதியில் "ஓய்வு நாள் ஒன்றில் இயேசு பரிசேயர் தலைவர் ஒருவருடைய வீட்டிற்கு உணவருந்தச் சென்றிருந் தார..." என்று ஆரம்பமாகிறது. இது சாதாரண விருந்து அல்ல. ஒரு பரிசோதனை விருந்து. இயேசுவைச் சோதிக்கக் கொடுக்கப்பட்ட ஒரு விருந்து. ஆனால் அதன்மூலம் இயேசு பல பாடங்களை சொல்லித்தருகின்றார்.

ஒரு மனிதனுடைய குணத்தை, பணபாட்டை உணவு உண்ணும் இடத்தில் கண்டுகொள்ளலாம் என்பர். இங்கு

### பரமபிதா காட்டிய பாதை

மனிதன் இயல்பாக செயற்படுவதால் அவனுள் இருக்கும் உண்மை இயல்பை அறிந்து கொள்ளலாம். அதிலும் விருந்துகள் வெறுமனே உணவுப் பரிமாற்றம் மட்டும் அல்ல. அதனுள் பல மனிதநேய உண்மைகள், இறை உணர்வுகளும் அடங்கியிருககின்றன.

யுத விருந்து முறைகளில் பல சடங்குகள் உண்டு: வீட்டிற்குள் நுழைவதற்கு முன் தங்களையே சுத்தமாக்கும் சடங்கு. உள்ளே சென்றதும் ஒருவர் ஒருவரை வாழ்த்தும் சடங்கு. விருந்துக்கு முன, விருந்து நேரத்தில், விருந்து முடிந்ததும் என்று ஒவ்வொரு நேரத்திற்கும் குறிக்கப்பட்ட சடங்குகள் பல இருந்தன. இவைகளுக்கு மேலாக, இந்த விரு நது நடந்தது ஓர் ஓய்வு நாள் என்பதால் சடங்குகள் கூடுதலாக இருந்திருக்கக் கூடும்.


அன்று இயேசு இவைகளை எல்லாம் அறிந்திருந்தாரா? என்பது தெரியவில்லை. இயேசு பிறந்தது, வளர்ந்தது எல்லாம் ஒரு சிறு கிராமத்தில், ஓர் எளிய குடும்பத்தில். முறையான கல்வி பெற்றாரா? அதுவும் தெரியவல்லை. படித்தவர்களுடன் நெருங்கிப பழகினாரா? அதுவும் சந்தேகம்தான். ஆனால படிக்காதவர்கள், பாமரர்கள், பாவிகள் என்று ஒதுக்கப்பட்டவர்களுடன் இயேசு நெருங்கிப் பழகினார். அர்த்தமற்ற சாஸ்திர சம்பிரதாயங்களை இயேசு சரித்துப்போட்டார்.

எனவே இயேசுவின் போதனையை கருத்தூன்றிக் கேடடு அவர் செயற்படடது போல நாமும வாழ்ந்தால் முதலிடம் நம்மைத் தேடி வரும்.

மனிதர் நாம் கூடிவரும் இடங்கள் மகிழ்ச்சியும் மன நிறைவும் தர வேண்டும். விருந்து வீடுகளுக்குச் சென்றால் நம்முடைய கவனம் எதில் இருக்கும், சிலருக்கு இடம்பிடிப்பதில் இருக்கும், சிலருக்கு பரிமாறும் உணவில் இருக்கும், சிலருக்கு வந்திருக்கும் விருந்தாளிகளில் இருக்கும், சிலருக்கு அணிந்திருக்கும் ஆடையில் இருக்கும்.

இயேசுவின் எண்ணமெல்லாம் வந்திருந்த ஆட்களிலும் அவர்களின் தேவைகளிலும் இருக்கிறது. அடுத்த மனிதனுக்கு எப்படி உதவலாம் என்பதில் இருக்கிறது. ஆனால் பரிசேயரின் கவனமெல்லாம் விருந்தில் முதலிடம், இயேசு ஏதாவது தவறு செய்வாரா, எங்காவதுதப்புநடைபெறுமாஎன்பதில்உள்ளது.

இத்தகைய எணணங்களோடு மனிதரகள் கூடும் இடங்களில் மகிழ்ச்சியும மனநிறைவும் விட பிரச்சினையும்வேதனையும்தான் மிகுதியாகும்.



உலகக் கணிப்புப்படி, யார்யார் தம்மை உயர்த்துகிறார்களோ அவர்கள் உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள். தாழ் நிலையில் உள்ளோர் தாழ்ந்தவர்களாகக் கருதபபடுகிறார்கள்.

ஆனால் இயேசுவினபார்வை வேறு. தாழ்ச்சி என்னும் நற்பண்பு நமக்கு வேண்டும் என அவர் கற்பித்தார், அப்பண்பு நம்மிடம் இருந்தால் நம்மையே உயர்ந்தவர்களாகக் கருதவோ பிறரைத் தாழ்ந்தவர்களாகக் கணிக்கவோ நாம் முற்படமாட்டோம். உயர்வும் தாழ்வும் மனிதப் பார்வையில் எழுவது. கடவுளைப் பொறுத்தமட்டில் எல்லா மனிதரும் சமமே.

ஆனால் பதவி, அந்தஸ்து போன்ற அளவீடுகளின் அடிப்படையில் மனிதரை உயர்ந்தவர் தாழ்ந்தவர் எனப் பாகுபடுத்தி, உயர்ந்தோருக்கு முதலிடம் தாழ்ந்தோருக்குக்குக் கடைசி இடம் எனச் சட்டங்கள் வகுக்கின்ற மனிதர்கள் கடவுளின் பார்வையைக் கொண்டிருக்கவில்லை என்பதை இயேசு சுட்டிக் காட்டுகிறார். இயேசுவின் சுட்டிக்காட்டலுக்கு உணர்ந்து செயற்படுவோமா.

# சம்பியன்ஸ் லீக்

## செப்.17 முதல் ஒக்.6 வரை

இந்தியாவில், சர்வதேச உள்ளூர் சம்பியன் அணிகள் பங்கேற்கும், ஐந்தாவது சம்பியன்ஸ் லீக் 'ருவென்ரி-20' கிரிக்கெட் தொடர், செப்.17 முதல் ஒக்.6 வரை நடைபெறுகிறது. இதில், 6ஆவது பிறீமியர் கிரிக்கெட் தொடரில் முதல் மூன்று இடங்களை பிடித்த மும்பை, சென்னை, ராஜஸ்தான் அணிகளுடன், அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் ஹீட், பெர்த் ஸ்கார்சர்ஸ், தென்னாபிரிக்காவின் லயன்ஸ், டைட்டன்ஸ், மேற்கிந்தியத் தீவின் டிரினிடாட் அண்டு டுபாகோ உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன.

### தகுதி சுற்று

இந்தியா (3), அவுஸ்திரேலியா (2), தெனனாபிரிக்கா (2), மேற்கிந்தியத் தீவை (1) சேர்ந்த 8 அணிகள் நேரடியாக பிரதான சுற்றில் விளையாடுகின்றன. மீதமுள்ள இரண்டு இடங்களுக்கு நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை மற்றும் இந்தியாவை சேர்ந்த 4 உள்ளூர் அணிகள் தகுதிச் சுற்றில் பங்கேற்கின்றன. ஐதராபாத்தில் செப்.17-20ஆம் திகதிகளில் நடைபெறும் தகுதிச் சுற்றில் ஒவ்வொரு அணியும், ஏனைய அணிகளுடன் தலா ஒரு முறை மோதும். புள்ளிப்பட்டியலில் முதலிரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் பிரதான சுற்றுக்கு தகுதி பெறும்.

### இரண்டு பிரிவு

பிரதான சுற்றில், 10 அணிகள் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடத்தப்படும். 'ஏ' பிரிவில் ராஜஸ்தான், மும்பை, லயன்ஸ், பெர்த் மற்றும் தகுதிச் சுற்றில் முதலிடம் பிடிக்கும் அணிகள் இடம் பெற்றுள்ளன. 'பி' பிரிவில் சென்னை, டைட்டன்ஸ், பிரிஸ்பேன், டிரினிடாட் அண்டு டுபாகோ மற்றும் தகுதிச் சுற்றில் 2ஆவது இடம் பிடிக்கும் அணிகள் இடம் பெற்றுள்ளன. செப்.21 ஆம் திகதி நடைபெறவுள்ள "ஏ" பிரிவுக்கான லீக் போட்டியில், ராஜஸ்தான், மும்பை அணிகள் மோதுகின்றன.

### உத்தேச அணி

இத்தொடரில் பங்கேற்கும் 12 அணிகளும், உத்தேச அணியை அறிவித்தன. பிறீமியர் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணிகளில் இடம்பெற்றுள்ள வெளிநாட்டு வீரர்கள், தங்கள் நாட்டை சேர்ந்த உள்ளூர் அணிகளிலும் இடம் பெற்றுள்ளனர். இரண்டு அணிகளில் இடம் பெற்றுள்ள 15 வெளிநாட்டு வீரர்களில், 11 பேர் இந்திய அணிக்காக விளையாட உள்ளனர்.

இலங்கையின் சங்ககரா (கந்துரதா மரோன்ஸ்), நுவன் குலசேகரா (கந்துரதா மரோன்ஸ்), அவுஸ்திரேலியாவின் பிராட் ஹாக் (பெர்த்), தென்னாபிரிக்காவின் குயின்டன் டி காக் (லயன்ஸ்) ஆகியோர் மட்டும், உள்ளூர் அணிக்கு விளையாட முடிவுசெய்துள்ளார்.

### வெளிநாட்டு வீரர்கள்

மேற்கிந்தியத் தீவு: டுவைன் பிராவோ (சென்னை), கெவான் கூப்பர் (ராஜஸ்தான்), போலார்டு (மும்பை).

தெனனாபிரிக்கா: டுபிளசி (சென்னை), ஆல்பி மார்கல் (சென்னை), கிறிஸ் மோரிஸ் (சென்னை).

அவுஸ்திரேலியா: நாதன் கவுல்டர்-நைல் (மும்பை), மைக்கேல் ஹசி (சென்னை), மிட்சல் ஜான்சன் (மும்பை), ஷேன் வாட்சன் (ராஜஸ்தான்).

இலங்கை: திசாரா பெரேரா (ஐதராபாத்).


### சச்சின் விளையாடுவாரா?

பிறீமியர் கிரிக்கெட் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்த மும்பை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின், சம்பியன்ஸ் லீக் தொடரில் விளையாடுகிறார். கடந்த தொடரில் மும்பை அணியின் தலைவராக இருந்த அவுஸ்திரேலியாவின் ரிக்கி பொண்டிங் பங்கேற்கவில்லை. இவர், சமீபத்தில் முடிந்த கரீபியன் பிறீமியர் லீக் தொடரில், 7 போட்டியில் 41 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தார்.

அத்துடன் ராஜஸ்தான் அணியின் தலைவர் ராகுல் டிராவிட்டுக்கு, இது கடைசி தொடர்.

## தென்னாபிரிக்கா தொடர் இந்தியாவுக்கு சவாலாக அமையும்

### - முன்னாள் இந்திய அணித் தலைவர் கங்குலி



எதிர்வரும் தென்னாபிரிக்க தொடர், இந்திய அணியின் பல வீரர்களுக்கு கடும் சவாலாக அமையும், என, இந்திய அணியின் முன்னாள் த்லைவர் சவுரவ் கங்குலி தெரிவித்தார்.

இந்திய அணி, சம்பியன்ஸ் கிண்ண முத்தரப்பு தொடர், சிம்பாப்வே தொடர் என வெற்றியை குவித்து வருகிறது. எதிர்வரும் (நவ.21- ஜன.19) தென்னாபிரிக்கா தொடரை அதன் சொந்த மண்ணில் (7 ஒரு நாள், 3 டெஸ்ட், இரண்டு 'ருவென்ரி-20') இந்திய அணி எதிர் கொள்கிறது.

இது குறித்து கங்குலி கூறுகையில்,

இந்திய அணி ஒரு நாள் போட்டியில் சிறப்பாக செயற்பட்டாலும், டெஸ்டில் இன்னும் முன்னேற்றம் அடைய வேண்டும். தென்னாபிரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற அணிகளுக்கு எதிரான போட்டியை, இதற்கான நல்ல வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்வது அவசியம். அணித் தலைவர் தோனி தென்னாபிரிக்காவுக்கு ஏற்கனவே சென்று விளையாடியுள்ளார். இது எந்த அளவு கடினமானது என்பது அவருக்குத் தெரியும். அந்த அணி கடுமையான தாக்குதலை வெளிப்படுத்தும். நமது வீரர்கள் பலருக்கு இது சவாலாக அமையும்.

### சச்சின் ஓய்வு

உலக கிரிக்கெட் அரங்கில் சச்சின் அதிக சாதனை புரிந்துவிட்டார். தென்னாபிரிக்க தொடருக்குப் பின், டெஸ்ட் போட்டியிலிருந்து ஓய்வுபெறுவது குறித்து அவர் தான் முடிவு செய்ய வேண்டும். இவருக்கு இந்திய அரசின் உயர்ந்த விருதான பாரத ரத்னா கிடைக்கும் என நம்புகிறேன்.

### சேவாக் சாதனை

நான் பார்த்த வரை, கவாஸ்கருக்குப் பின் ஆரம்ப வீரராக களமிறங்கி சிறப்பாக செயற்படுவது சேவாக் மட்டும்தான். இவரின் சாதனையே இதை வெளிப்படுத்தும். 34 வயதாகும் இவரை புறக்கணிக்க முடியாது. அணிக்கு விரைவில் திரும்புவார். கம்பீர், யுவராஜ், ஜாகிர்கான், ஹர்பஜன் சிங்கும் அணியில் இடம்பெறுவர்.

### எல்லை மீறக் கூடாது

ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி கைப்பற்றியது. இதற்காக, இவர்கள் கொண்டாடிய விதத்தை செய்தித்தாளில் படித்தேன். உற்சாக மிகுதியில் ஆடுகளத்தில் இப்படி நடந்து கொண்டது தவறானது. குறிப்பாக, பீட்டர்சன் போன்றவர்கள் முதிர்ச்சியான வீரர்கள். எந்த நேரத்திலும், எல்லையை மீறக்கூடாது. இவ்வாறு கூறினார் கங்குலி.

# களமிறங்கும் அணிகளும் வீரர்களும்

*செப்ரெம்பர் 17ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள சம்பியன்ஸ் லீக் ருவென்ரி ருவென்ரி தொடருக்கான முழுமையான அணி விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*நேரடியாகத் தகுதிபெற்றுள்ள 10 அணிகளோடு, தகுதிகாண் தொடரில் பங்குபற்றவுள்ள 4 அணிகளுக்குமான குழாம்களும் வெளியிடப்பட்டுள்ளன.*

**பிறிஸ்பேர்ண் ஹீற்:** ஜோ பேர்ண்ஸ், டான் கிறிஸ்ரியன், பென் கட்டிங், பீற்றர் பொறஸ்ற், டொமினிக் மைக்கேல், கிறிஸ் ஹார்ட்லி, நேதன் ஹொரிட்ஸ், ஜேம்ஸ் ஹோப்ஸ், மத்தியூ கேல், கிறிஸ் லைன், அலிஸ்ரர் மக்டேமர்ட், கமரன் கனொான், அலெக்ஸ் கெம்ப், கேமர் றோச், கிறிஸ் சபர்க்

**சென்னை சுப்பர் கிங்ஸ்:** மகேந்திரசிங் டோனி, சுரேஷ் ரெய்னா, முரளி விஜய், ரிதிமான் சகா, ரவிச்சந்திரன் அஷ்வின், சுப்ரமணியம் பத்ரினாத், இம்தியாஸ் அஹமட், ரவீந்திர ஜடேஜா, மோகித் சர்மா, மைக்கல் ஹசி, டுவைன் பிராவோ, அல்பி மோர்க்கல், ஜேஸன் ஹோல்டர், பஃப் டு பிளெஸிஸ், கிறிஸ் மொறிஸ்

**பைசலாபாத் வோல்வ்ஸ்:** மிஸ்பா உல் ஹக், ஆசிப் அலி, அலி வக்காஸ், குராம் ஷஷாத், மொஹமட் சல்மான், வக்காஸ் மசூட், சமி உல்லா காம் நியாஸி, அசத் அலி, சயீட் அஜ்மல், இஷான் அடில், ஹஸான் மஹ்மூட், ரானா ஜஹன்டாட் கான், பாருக் ஷஷாத், இம்ரான் காலித், அம்மர் மஹ்மூட் கான்

**ஹைவெல்ட் லயன்ஸ்:** ரெம்பா பவுமா, குலாம் போடி, குயின்டன் டீ கொக், நீல் மக்கன்ஸி, லொன்வபோ சொற்சொபி, உதன் ஓ செய்லி, ஹார்டஸ் வில்ஜோன், றஸ்ஸி டுசென், அல்விரோ பீற்றர்சன், ஆறொன் ஃபங்கிசோ, டுவைன் பிறீற்றோறியஸ், ஜீன் சைம்ஸ், இம்ரான் தாஹிர், சொஹைல் தன்வீர், தமி சொலக்கிலே

**மும்பை இந்தியன்ஸ்:** றோகித் சர்மா, சச்சின் டென்டுல்கர், டினேஷ் கார்த்திக், பிரக்ஜான் ஓஜா, ஹர்பஜன் சிங், அம்பத்தி ராயுடு, றிஷி தவான், ஆதித்தியா தரே, அக்ஷர் பட்டேல், அபு நெச்சிம் அஹமட், கெரான் பொலார்ட், டுவைன் ஸ்மித், நேதன் கோர்ட்டர் நீல், மிற்சல் ஜோன்சன், கிளென் மக்ஸ்வெல்

**ஒற்றாகோ வோல்ற்ஸ்:** நிக்கொலஸ் பியர்ட், மைக்கல் பிரேஸ்வெல், நீல் ப்ரூம், இயன் பட்லர், மார்க் கிறெய்க், டெரெக் டீ பூடர், ஜேக்கப் டஃபி, பிரெண்டன் மக்கலம், நேதன் மக்கலம், ஜேம்ஸ் மக்மிலன், ஜேம்ஸ் நீஷம், ஆரொான் றெட்மொன்ட், ஹேமிஸ் றதர்போர்ட், றயன் ரென் டூஸ்காட்டா, நீல் வக்னர்

**பேர்த் ஸ்கோர்ச்சர்ஸ்:** அஸ்ரன் ஏகர், மைக்கல் பியர், ஜேஸன் பெஹ்ரென், அஸ்ரன் ரேர்ணர், லியம் டேவிஸ், பிரட் ஹொாக், பேர்ட் கொக்லீ, சைமன் கற்றிச், மிற்சல் மார்ஷ், ஷோன் மார்ஷ், ஜோயல் பரிஸ், அல்போன்ஸோ தோமஸ், ரொம் ட்ரிஃபிற், அடம் வோகஸ், சாம் வைற்மான்

**ராஜஸ்தான் ரோயல்ஸ்:** ராகுல் ட்ராவிட், அஜின்கியா ரஹானே, ஸ்ருவேர்ட் பின்னி, சஞ்சு சம்சொன், அஷோக் மெனேரியா, திஷாந்த் யக்னிக், விக்ரம்ஜித் மலிக், ராகுல் சுக்லா, பிரவீன் தம்ப்பே, சித்தார்த் த்ரிவேடி, ஷேன் வொற்சன், பிரட் ஹொட்ஜ், ஜேம்ஸ் ஃபோள்க்னர், கெவோன் கூப்பர், ஷோன் ரெய்ற

**சண் றைசர்ஸ் ஹைதராபாத்:** ஷீகர் தவான், பார்த்திவ் பட்டேல, கமரன் வைற், ஜே.பி.டுமினி, டேல் ஸ்ரெய்ன், டெரன் சமி, பிப்லாப் சமந்த்ரே, திஸர பெரேரா, கரண் சர்மா, ஹனுமான் விஹாரி, ஆஷிஷ் ரெட்டி, அமித் மிஷ்ரா, இஷாந்த் சர்மா, ஆனந்த் ராஜன்

**றைற்றன்ஸ்:** ஜக்ஸ் ருடோல்ப், ஹென்றி டேவிட்ஸ், ஏபி.டி. வில்லியர்ஸ், பர்ஹான் பெஹர்டியன், ஹெய்னோ குண், டேவிட் வியஸி. ஈடன் லிங்ஸ், ஏதி பலாட்டி, றொ்வான் றிச்சர்ஸ், மங்கலிஸோ மோசெலே, சி.ஜே.டீ.வில்லியர்ஸ், கிறேம் வான் புரேன், மோர்னி மோர்க்கல், றூலோஃப் வன்டர் மேவா, மார்ச்சன்ட் டீ லாங்க

**ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ:** டினேஷ் ராம்டின், றயாட் எட்றிட், ஜேஸன் மொஹமட், நிக்கொலஸ் பூரன், சுனில் நரைன் எவின் லெவிஸ், சாமுவேல் பத்ரி, நவின் ஸ்ருவேர்ட், ஷனொன் கப்றியல், கேசன் யன்னிக் ஒற்லீ. அட்ரியன் பரத், ஷேர்வின் கங்கா, லென்டில் சிமன்ஸ், ரவி ராம்போல், டெரன் பிராவோ

**கந்துரட்ட மரூன்ஸ்:** லஹிரு திரிமன்ன, நுவான் குலசேகர, உபுல் தரங்க, திலின கண்டம்பி, குமார் சங்கக்கார, ஷெஹான் ஜெயசூரிய, சாமர சில்வா, மிலிந்த சிரிவர்தன, டில்ஹார லொக்குஹெட்டிகே, தம்மிக்க பிரசாத், அஜந்த மென்டிஸ், கௌஷால் லொக்குவாராய்ச்சி, லஹிரு ஜெயரத்ன, தனஞ்சய டீ சில்வா, சுராஜ் ரந்தீவ்

# இலங்கை – சிம்பாவே கிரி.போட்டிகள் பிற்போடப்பட்டது

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருந்த இலங்கை அணியின் தொடர் பிற்போடப்பட்டுள்ளது. சிமபாவே கிரிக்கெட் சபையின் வேண்டுகோளின பேரிலேயே இது பிற்போடப்பட்டுள்ளது.

நிதி தொடர்பாக சிம்பாவே கிரிக்கெட் சபை எதிர்கொண்டுவரும் பிரச்சினைகளின் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சிம்பாவே கிரிக்கெட் சபை தனது கருத்துக்களை இலங்கை கிரிக்கெட் சபைக்குப் பகிர்ந்திருந்ததாகவும், அதனடிப்படையில் இத்தொடரை பிற்போடுவதற்கான முடிவை இருநாட்டுச் சபைகளும் எடுத்துள்ளன.

மறு அறிவித்தல் வழங்கப்படும் வரை இத்தொடர் பிற்போடப்பட்டுள்ளது: 2 டெஸ்ட் போட்டிகள், 3 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 2 ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டிகள் அடங்கிய இத்தொடர் ஒக்ரோபர் முதலாம் திகதி ஆரம்பிக்க விருந்தது.

# மோசமான நிலையில்...

இலங்கைக்கான தனது உண்மை கண்டறியும் பயணத்தை கடந்த 25-ம் திகதி ஆரம்பித்திருந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது பயணத்தின் முடிவில் நேற்றுக் காலை உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே, இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐ.நா வதிவிடப் பிரதிநிதியின் செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் குறித்த நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"படைத்துறை சார்ந்த அமைப்புகளால் ஊடகவியலாளர்கள் மற்றும் மனிதவுரிமை ஆர்வலர்கள் துன்புறுத்தப்படுவது அதிகரித்துள்ளது. இதனால் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட முடியாத நிலை காணப்படுவதுடன், சுயதணிக்கைகளும் இடம்பெறுகின்றன. சுதந்திரமாக கருத்துக்கள் வெளியிடுவோர் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கம் தகவல் அறியும் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இலங்கைக்கான எனது இந்தப் பயணத்தின்போது என்னுடன் கலந்துரையாடிய மனிதவுரிமை ஆர்வலர்கள் மற்றும் பொது மக்கள் இலங்கைப் பொலிஸார் மற்றும் படையினரால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாதது. இத மிகவும் பாரதூரமான விடயமாகும்.

என்னை இங்கே அழைத்துவிட்டு இத்தகைய ஒரு காரியத்தை அவர்கள் செய்யக கூடாது. இங்கே இலங்கை அரசாங்கத்தை விமர்சிப்பவர்கள் அடிக்கடி தாக்குதலுக்கு ஆளாகின்றனர். அவர்களது குரல்களை ஒரேயடியாக ஒடுக்கிவிடும் விதமான காரியங்களும் இடம்பெறுகின்றன.

அரசாங்கத் தரப்பினரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய கண்காணிப்புகளும், துன்புறுத்தலையும் வைத்துப் பார்க்கும் போது இலங்கை மோசமான ஒரு நிலையில் உள்ளதாகவே தோன்றுகின்றது.

இலங்கை அரசாங்கம் எதேச்சாதிகாரப் பாதையில் செல்வதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றமை மிகவும் ஆழமான கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் போர் இடம்பெற்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படைத்தரப்பினரைக் குறைக்க ஜனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். போரால் பாதிக்கப்பட்ட 2 மாகாணங்களிலும் படைக்குறைப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும்.

வெலிவேரிய சம்பவம், வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்ற சம்பவங்கள் முழுமையான மனிதவுரிமை மீறல்களாகும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்கள் குறித்த நம்பகமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இலங்கையின் இறுதிக் கடடப்போரில் என்ன நடந்தது என்பது குறித்து நம்பகமான உள்நாட்டு விசாரணை மேற்கொள்ளப்படாது விட்டால் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம்.

இலங்கையில் என்னைச் சந்திப்பதற்காக கோரிக்கை விடுத்த அனைவரையும் சந்திக்க முடியாமல் போனமைக்கு வருந்துகிறேன். இலங்கைக்கான எனது பயணம் குறித்து அடுத்த மாதம் இடைக்கால அறிக்கையையும், எதிர்வரும் மார்ச் மாதம் முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிக்கவுள்ளேன்.

இந்தியப் பாரம்பரியத்தில் இருந்து வந்தவள் என்பதால், விடுதலைப் புலிகளின் பிரதிநிதி என இங்குள்ள சில அமைச்சர்களும், ஊடகங்களும் குறிப்பிடுகின்றன. இது மிகவும் தவறானது என்பதுடன், என் மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல் ஆகும்.

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகாலப் போரில் உயிரிழந்த அனைத்து இலங்கையர்களையும் நான் மதிக்கிறேன். அவர்களுடைய குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். அந்த இழப்பை அவர்களால் ஈடுசெய்ய முடியாது. போர் முடிவடைந்தும் துன்பங்கள் தீரவில்லை.

வடமாகாணசபைத் தேர்தல் அமைதியாகவும், நீதியான முறையிலும் இடம்பெறும் என நான் நம்புகிறேன். அதிகார பகிர்வுக்கு அது புதிய கட்டமாக அமையும். வடமாகாணத்தின் சிவில் நடவடிக்கைகளில் சிறிலங்கா படைத்தரப்பின் தலையீடு குறித்து கவலை அடைகிறேன். காணி சுவீகரிப்பு மற்றும் சிவில விடயங்களில் சிறிலங்கா படையினர் மேற்கொள்ளும் தலையீடுகளுக்கு கட்டுப்பாடு இருக்க வேண்டும்.

பெண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல் தொடர்பிலான முறைப்பாடுகள் கவலை தருகின்றன. மாகாண அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் பாலியல் துன்புறுத்தல்கள் குறித்து நான் கடும் எச்சரிக்கை விடுத்தேன். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்குவதற்கான நேரம் இது எனவும் அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளேன்.

வடமாகாணத்தில் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை அறிந்து அதிர்ச்சி அடைந்தேன். இத்தகைய கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தும் என்று நான் நம்புகிறேன். காணாமற் போனவர்களின் உறவினர்களைச் சந்தித்து பேசிய போது, வெள்ளை வான் கடத்தல்கள் குறித்தும் அறிந்தேன். இலங்கை அரசாங்கம் நியமித்துள்ள ஆணைக்குழுவிடம் இருந்து நான் கூடிய தகவல்களை எதிர்பார்க்கிறேன்.

சட்டம் ஒழுங்கு என புதிய அமைச்சு உருவாக்கி பொலிஸ் அதிகாரங்கள் அதன் கீழ் கொண்டு வரப்பட்டாலும், இவ்விரு அமைச்சுக்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழுள்ளமை கவலையளிக்கிறது" என்றும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நவநீதம்பிள்ளை மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விஜயத்தின்போது சில அரசாங்க அமைச்சர்கள் கூட உங்களுக்கு அவமரியாதையை ஏற்படுத்தக்கூடிய சில கருத்துக்களை கூறியிருந்தார்களே என்று செய்தியாளர கேட்டதற்கு பதிலளித்த நவநீதம்பிள்ளை, மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் சில எம்பிக்கள் கூறிய கருத்துக்களை இலங்கை அரசாங்கத்திடம் தான் எடுத்துச் சென்றதாகவும் மிகவும் மோசமான சில கருத்துக்களுக்காக இலங்கை ஜனாதிபதி தன்னிடம் வருத்தம் தெரிவித்ததை தான் வரவேற்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையில் கடந்த ஒருவார காலமாக பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பலதரப்பட்ட மக்களையும் சந்தித்திருந்த ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிளளையின் இலங்கை விஜயம் நேற்றுடன் நிறைவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# நவநீதம்பிள்ளை...

ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அதிகாரபூர்வ விஜயத்தை மேற்கொண்ட ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்றுமுன்தினம் பிற்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியபோதே, மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இச்சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம, ஜெனிவாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இச்சந்திப்பின் போது, இலங்கையில் நிலையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அப்பால், நல்லிணக்கம் மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளை உறுதிப்படுத்த வேணடியது அவசியம் எனவும், இதனை உறுதிப்படுத்துவதற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் தொடர்பாக கூடுதல் கவனம் செலுத் தப்பட வேண்டும் என்றும் அவர் மகிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்போது சிறுபான்மை மக்களின் வழிபாட்டுத் தலங்கள் மீதான தாக்குதல்கள் திட்டமிட்ட முறையில் இடம்பெறவில்லை எனவும், எதிர்பாராமலேயே இத்த கைய தாக்குதல்கள் இடம்பெறுவதாகவும் நவநீதம்பிள்ளையிடம் ஜனாதிபதி கூறிச் சமாளித்துள்ளார்.

அத்துடன், ஐ.நா பக்கசார்பாகச் செயற்படுவதாக நாட்டு மக்கள் பலரும் கருதுவதாகவும், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் உங்களால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை கூட முன்கூட்டியே தீர்மானிக்கப்படடது எனவும் மக்கள் பலரும் கருதுவதாகவும் ஜனாதிபதி, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிளளையிடம் தெரிவித்துள்ளார். (செ-11)

# அஞ்சலி...

போவதாக தெரியவந்ததையடுத்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டால் கடும் மக்கள் எதிர்ப்பு நிலை ஏற்படும் என்று பாதுகாப்பு அமைச்சும், வெளிவிவகார அமைச்சும் தெரியப்படுத்தியுள்ளன.

இந்த செயற்பாட்டை எந்த விதத்திலும் அனுமதிக்க முடியாது என்று அரசு இராஜதந்திர மட்டத்தில் அறிவித்ததை தொடர்ந்து மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தும் முடிவை மனித உரிமை ஆணையாளர் இறுதி நேரத்தில் கைவிட்டதாக தெரிய வருகிறது. (செ-11)

# வன்முறைகளைக்...

பேரில் கைது செய்யபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில், வடக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் அங்கஜனின் தந்தையான இராமநாதன் கைது செய்யப்பட்டமை தொடர்பிலும் பொலிஸார் பக்கச்சார்பாக செயற்பட்டதாகவும் வேட்பாளர் அங்கஜன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியின் பிரதான அமைப்பாளர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்ததோடு,

குறித்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தின் போது தனது பாதுகாப்பு, பொலிஸ் உத்தியோத்தர் மீது துப்பாக்கி சூடு நடத்தப்பட்டமை தொடர்பாகவும் தம்மால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாகவும் பொலிஸார் இதுவரை எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டினார்.

இதனைவிட ஆளும் கட்சி வேட்பாளர் குமார் சர்வானந்தனினதும் அவரது ஆதரவாளர்களினதும் முறைப்பாட்டையும் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களையும் அடிப்படையாக வைத்து எனது தந்தையான இராமநாதனைக் கைது செய்ய முடியுமென்றால் ஏன் என்னால் செய்யப்பட்ட முறைப் பாட்டினை யும் எனது பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் தனது ஆதரவாளர்களினதும் முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு வேட்பாளர்சர்வானந்தை கைது செய்ய வில்லை எனவும் கேள்வி எழுப்பினார்.


இவ்வாறு வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் குற்றம் சாட்டியுள்ள நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்சர்வானந்தனும்பொலிஸார்மீது பாரிய குற்றச்சாட்டுக்களை முன் வைத்திருந்தார்.

சாவகச்சேரியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை யடுத்து மறுநாள் 28ஆம் திகதி யாழ்.ஊடக அமையத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்ட அவர் குறித்த சம்பவம் இடம்பெற்ற போதும் பொலிஸார் பக்கச்சார்பாகவே நடந்தனர் எனவும் சம்பவ இடத்தில் சாவகச்சேரி, கொடிகாமம் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் சமுகமளித்திருந்தபோதும் துப்பாக்கி சூடு மேற்கொண்டவர்களை கைது செய்யாதது ஏன் எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இதனைவிட யாழ்.பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற விசாரணைகளின் போது அங்கஜனின் தந்தையார் குளிரூட்டப்பட்ட அறையில விசாரிக்கப்பட்டதாகவும் தம்மை மரநிழலில் வைத்து விசாரித்ததாகவும் இவ்வாறு பொலிஸார் பக்கச் சார்பாக நடந்து கொண்டதாகவும் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)


## மரண அறிவித்தல்

### கந்தையா இராசையா (நல்லூர் பழக்கடை)



51, சிவன் புதுவீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா 31.08.2013 நேற்றுச் சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-லக்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், பவளத்தின் அன்புக் கணவரும், லலிதாதேவி, காலஞ்சென்ற சுசிலாதேவி, ஜெயபாலசிங்கம், பஞ்சலிங்கம் (பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில், அண்ணாமலை இசை மன்றம் வெற்றிலை-ஜாதகம்), நிர்மலாதேவி (கனடா), காலஞ்சென்றவர்களான சிவா, ஜெயசிறி, ஜெயஉதயகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், ராசதுரை, செபஸ்ரியாம்பிள்ளை, விஜயாமரியராணி, மாக்ரோட், ஜெயக்குமார், ஜெயம், மேகனா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:
0776204833

தகவல்: பிள்ளைகள், மருமக்கள், பேரப் பிள்ளைகள்.

(3836)



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் நலன் விரும்பியும், ஓய்வுநிலை ஆசிரியருமான/ச. முத்துலிங்கம் அவர்களின் அன்புச் சகோதரன்

### சண்முகம் தணிகாசலம்

(சமாதான நீதவான், திருநெல்வேலி)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அன்னாரின் இறப்பால் துயரும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், யா/ பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் நீங்கள் தேர்ச்சி பெற்றவராயின கொழும்பு, யாழ்., விஸ்வமடு போன்ற இடங்களில் (கட்டடங்கள், வாயக்கால், வாவி) வெற்றிடங்கள். மேசன், கையுதவியாளர், தச்சு, பெயின்டர், டெலின்பாஸ் தேவை. தொழில் அடிப்படையில் சம்பளம் 25,000/- , 40,000 உணவு, தங்குமிடம் உண்டு.
தொடர்பு : 0775561883 , காரியாலயம், வவுனியா (சி-4538)

## உயர்ந்த சம்பளத்துடன் நிரந்தர வேலைவாய்ப்பு

துறைமுகத்திலும் விமான நிலையத்திலும் (தனியார்) வேலைவாய்ப்பு கப்பல் புனர்நிர்மாணித்தல் பிரிவில் சாதாரண ஊழியர்கள் , வெல்டர், தச்சு, பெயின்டர், விமானநிலையத்தில் (தனியார்) சுத்திகரிப்பாளர் கேடரிங் பிரிவிலும் வெற்றிடங்கள். 18 -50 ஆண் பெண் இருபாலாரும் தேவை. சம்பளம் 18,000/-, 35,000/-, 40,000/- (தொழில் அடிப்படையில் சம்பளம்)

உணவு, தங்குமிடம் சகாய விலைகளில்
வருகை தரும் நாளிலே வேலை

**தொடர்பு: 0775561883** (C-4536)

## விரைவான தொழில்வாய்ப்பு

விரைவான தொழில் வாய்ப்பு, கல்வி அறிவு அவசியமில்லை. நேர்முகப் பரீட்சை இல்லை.எம்மிடம் நிரந்தர வேலைவாய்ப்பு, கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜாம், சொக்லட், பிளாஸ்டிக் பை, water bottle, பென்சில், கோழி இறைச்சி தொழிற்சாலை, ஆடைத் தொழிற்சாலை போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர், பொதியிடல் பிரிவு, லேபல் பிரிவு களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-50 ஆண்-பெண் தேவை.உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில் சம்பளம் 17,000/-, 25,000/-, 32,000/- வருகை தரும் நாளிலே வேலைக்கு சேர்த்து கொள்ளப்படுவீர்கள்

**தொடர்பு: 0775561883**
காரியாலயம், வவுனியா (சி- 4439)

## கடைத் தொகுதியுடன் உள்ள வீடும், காணியும் விற்பனைக்குண்டு

சாவகச்சேரி வர்த்தக மையப்பகுதியில் கண்டி வீதியில் புதிய வர்த்தக வங்கிக் கிளைக்கு அருகாமையில் டச்சு வீதி டிறிபேக் கல்லூரிக்கு முன்பாகவும் (நகர சபை கடைத் தொகுதிக்கு முன்பாக) உள்ள மூன்று கடைத் தொகுதியும் மற்றும் மேல் வீட்டுடன் உள்ளடங்கிய இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொ/பே இல. 0771738050 (3815)

## தேவை

கொடிகாமத்தில் உள்ள வர்த்த நிலையத்திற்கு கணனி அறிவுள்ள ஆண்/பெண் தேவை.

**தொடர்புகளுக்கு:**
(C-4537) **0721869119**

## இளம் பெண்...

நேற்று அதிகாலை மீட்கப்பட்ட சடலம் சூரியகுமார் லீனா என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வண்ணார்பண்ணையிலுள்ள அவரது வீட்டுக்கு அருகிலிருந்தே இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. சூரியகுமார் லீனா என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் கொலை செய்யபபட்டிருக்கலாமென சந்தேகம் வெளியிட்ட யாழ். பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேறகொண்டுள்ளதாக தெரிவித்தனர். (செ-6)

## af ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரான்ஸ், கனடாவுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் மொழி ஆர்வமுள்ளோர் யாவரும் படிக்கலாம். (கிளிநொச்சி, முல்லைத்தீவை சேர்ந்த வர்களும் இங்கு படிக்கிறார்கள்). France இல் தொடர்ந்து French படிப்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது நிறுவனத்தின் Certificate உதவுகின்றது. எமினோனில் உலகில் பிரெஞ் கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே இது ஓர் அரிய சந்தர்ப்பம். உடன் பதிவு செய்யுங்கள்.

**புதிய வகுப்பு :விரைவில்...**

61, Kachchery-Nallur Road,Jaffna. *T.P.:0212228093* (3691)

கச்சேரி பஸ் தரிப்பிடத்தை அடுத்துவரும் சந்தியில் அமைந்துள்ள மாடிக் கட்டிடம்

## Vacancyes



கனேடிய பல்தேசிய கம்பனி யாழில் தனது ஒன்பதாவது கிளையினை ஆரம்பிக்கிறது. இக் கிளைக்கு 20 பேர் இணைக்கப்பட உள்ளனர்.

*We Provide, Full Training*

No Experience Necessary...

- Customer Service
- Administration
- Marketing Trainee
- Management Trainee

You Can Earn 18,000 - 25,000 Per Month
Call on 0774455888, 02149993166 (3814)

## After A/Levels...

சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே IT டிப்ளோமா



JOIN
IT & English
DIPLOMA

ESOFT Shaping Lives, Creating Futures.

edexcel Assured

மேலதிக விபரங்களுக்கு SMS to 077 990 56 11

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
Duration : 4 months
Pendrives & T- Shirt
பெறுபேறுகளுக்கு முன்னர் இரு டிப்ளோமாக்களை பெற்றுக்கொள்ளுங்கள்
* Payable in Installments

Other Diplomas

- DiWE Diploma in Web Engineering — காலம் 5 மாதங்கள்
- DiBM Diploma in Business Management — காலம் 4 மாதங்கள்
- DiE Diploma in English — காலம் 4 மாதங்கள்
- DiSE Diploma in Software Engineering — காலம் 5 மாதங்கள்
- DiHN Diploma in Hardware & Networking — காலம் 4 மாதங்கள்
- DiGD Diploma in Graphic Designing — காலம் 4 மாதங்கள்

புதிய பிரிவுகள்
2013.09.06
காலை 9:00 மணி



FREE Pendrives & T- Shirt

ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO CAMPUS**
No 137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 Hotline: 077 309 9 308

## STUDY in UK



- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.

நீங்கள் City&Guilds B1 or IELTS பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக இருந்தால் உங்களுக்காக, எமது நிறுவனம் "கல்லூரிக்கட்டணம்" மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு பணத்தை செலவு செய்கின்றது.

கிழமை நாட்களில் 10 மணித்தியாலங்கள் வேலைசெய்யக்கூடிய LONDON அரச கல்லூரிகளில் ENGLISH,IT, MANAGMENT டிப்ளோமாக்களை முடித்துக்கொள்ள முடியும்.

City&Guilds நிறுவனத்தில் ஆசிரிய பயிற்சிபெற்ற ஆசிரியரின் வழிகாட்டலில் வகுப்புக்கள். *பரீட்சையில்100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்.

CITY & GUILDS APPROVED CENTRE

கடந்த 6 மாதங்களில் 30 மாணவர்களிற்குமேல் City&Guilds(UK) English Diploma (A1,B1) பரீட்சையில் சிறந்த, அதிசிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டுள்ளனர்

Sep/Dec Intake started now

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

WORLD EDUCATION CONSULTANCY
No:377, Sangaththanai, Chavakachcheri
T.P: 0779 265447, 021 7200 989
e mail: chec.usr@gmail.com Gov.Reg No:TN/DS/UC/0324
சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகில் (C-4535)

## வாகன விற்பனைக்கு



Dolphin 182 High roof
Super long Js ❖❖❖❖
Manual Dual A/C
Full Adjestable rotate seats
Alloyweel new tyres
SL Engine
Very good condition with lease
Immidiate sale
0772393165 (3818)

## திருமணத் தேவைக்கான கார் வாடகைக்கு விடப்படும்



தொடர்புகளுக்கு:
0771950228,
021 222 8984
0776152992

இல.44, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (C-4543)

## AFTER A/L?

யாழ் மாவட்டத்தில் புகழ்பூத்த எமது ஆங்கிலப் பாடநெறிகளில் இணைவதன் ஊடாக ஆங்கில மொழியினை சரளமாக பேசிடுங்கள்.

**DIPLOMA IN ENGLISH**

A/L எடுத்த மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமானது

புதிய பிரிவுகள் ஆரம்பம்

**02.09.2013 @ 9.00 A.M**

(அனுமதிகள் வழங்கப்படும்)
இப்பிரிவானது சனி/ஞாயிறு தினங்களில் நடைபெறும்

E-CITY FEEL BRILLIANT FUTURE
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரகாளி அம்மன் கோவில் அருகில்)
0770610271 / 0774924166 / 0773400418

## மலேசியாவில் வேலைவாய்ப்பு



காலத்தை வீணடிக்காதீர்கள்...

**அரசாங்க எச்சரிக்கை**

போலி முகவர்களின் ஆசைவார்த்தைகளை நம்பி குறைநத கட்டணத்தில் சுற்றுலா விசா (VISITING VISA) மலேசியா சென்று வேலைவாய்ப்பு தேடவேண்டாம். அப்படி செல்பவர்கள் சரியான வேலைவாய்ப்பின்றி அடிப்படைத் தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத இக்கட்டான நிலைமைக்கு தள்ளப்படுவீர்கள். UNHCRஇன் அகதிப்பதிவு என்பது வேலைவாய்ப்பு அனுமதி அல்ல. அகதிப்பத்திரத்தில் திருட்டுத்தனமாக வேலை செய்து பிடிபடுமிடத்தில் சட்டரீதியான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவீர்கள்.

(நீண்டகால தொடர்புள்ள கம்பனிகள்)

இதுபோன்ற சர்வதேச கம்பனிகளுடான விரும்பத்தக்க வேலைகள் ஒழுங்குபடுத்தித் தரப்படும். (தங்குமிட வசதிகள் உண்டு) அடிப்படை வருமானம் 48,000/- இருந்து 60,000/- பகுதிநேரம் மற்றும் மேலதிக நேர வேலைகளும் உண்டு. (மேலதிக வருமானம்)

உங்களால் நம்பக்கூடிய உறுதிப்பாட்டுடன் கூடிய தொடர்பு

**GLOBAL COLLEGE OF HIGHER STUDIES**
788, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 - 222 8981, 0777 805286

10 நாட்களுக்குள் அனுமதி
கல்வித் தகைமை முக்கியமானதல்ல
நம்பிக்கை மிக்க நிரந்தர கம்பனிகள்

(3880)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ. ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.